Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் யாழ்ப்பாணம் சோபகிருது வைகாசி 1 ஆம் நாள் துல்ஹஜ் 20 (15 5-63) புதன்கிழமை இதழ் 94

# பாரத-பாகிஸ்தான் சுற்றுப் பேச்சு

## புதுடில்லியில் இன்று ஆரம்பம்

### நேரு - அயூப் சந்திப்புக்கு வழிபிறக்கலாம்

புதுடில்லி, மே 14

**காஷ்மீர் மற்றும் அதுசம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் பாரதத்துக்கும் பாகிஸ்தானுக்கு மிடையேயான ஆறுவது சுற்றுப் பேச்சுக்கள் நாளை புதன்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகும்.**

கடந்த 15 வருடங்களாக பாகிஸ்தானுக்கும் பாரதத்துக்குமிடைய இருந்துவரும் காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் நாளை புதன்கிழமை புதுடில்லியில் நடைபெறும் ஆறுவது சுற்றுப் பேச்சுக்களுக்கு, பாரதம் சார்பில் இந்திய ரயில்வே மந்திரி திரு. சர்தார் சுவாண்சிங்கும் பாகிஸ்தான் சார்பில், பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி திரு. புட்டோவும் கலந்து கொள்கின்றனர்.

காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் நடைபெறும் ஆறுவது சுற்றுப் பேச்சுகளில் கலந்து கொள்ளும் பொருட்டு பாக். வெளியுறவு மந்திரி திரு. புட்டோ தலைமையில் தூதுகோஷ்டியொன்று இன்று மாலை விமான மார்க்கமாக ராவல்பிண்டியிலிருந்து புதுடில்லிக்கு புறப்பட்டது.

கடைசியாக காரச்சியில் சென்ற மாதம் 22-ம் திகதி நடைபெற்ற 5-வது சுற்றுப் பேச்சுக்களின் போது, எந்த விதமான முன்னேற்றமும் காணப்படாததால் ஆறுவது சுற்றுப் பேச்சுக்களை நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.

காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் கடந்த மாதம் கராச்சியில் நடைபெற்ற 5-வது சுற்றுப்பேச்சுக்களின் பின்னர் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி திரு. புட்டோ பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் மே மாதம் 15-ம் திகதி புதுடில்லியில் ஆரம்பமாகும் ஆறுவது சுற்றுப் பேச்சுக்களே இறுதியானதாக விருக்குமென்றும் பாரதப்பிரதமர் நேருவும் பாகிஸ்தான் ஜனதிபதி அயுப்கானும் சந்திப்பதற்கான கட்டம் ஆறுவது பேச்சுக்களின் போதே உருவாகுமென்றும் கூறினர்.

பாரத கோஷ்டியின் தலைவரான இந்திய ரயில்வே மந்திரி சர்தார் சுவர்ண்சிங் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் காஷ்மீர் மற்றும் அது சம்பந்தமான இதர பிரச்னைகள் குறித்தும் நடைபெறும் சுற்றுப் பேச்சுகளில் எது இறுதியானது என்பதைத் தமமால் சொல்ல முடியாதென்றும் எந்தப் பேச்சும் இறுதியானதாகவிருக்க வேண்டுமென்று தாம் கருதவில்லையென்றும் ஆனல் பாரத-பாகிஸ்தான் பிரச்னை சுமுகமாகத் தீர்வதையே பாரதம் விரும்புகிறதென்றும் கூறினர்.

**நேபாளமந்திரி கருத்து**

பாரத-பாகிஸ்தான் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறுவது குறித்து நேபாள வெளியுறவு மந்திரி அபிப்பிராயம் தெரிவிக்கையில் இரண்டு நாடுகளுக்குமான காஷ்மீர் பிரச்னை சுமுகமாகத் தீரவேண்டுமென்பதையே நேபாளம் விரும்புகிறதென்று கூறினர்.

**அமெரிக்கா, பிரிட்டன் அக்கறை**

காஷ்மீர் பிரச்னை சுமுகமாக விரைவில் தீரவேண்டுமென்பதில் பொதுவாக அமெரிக்காவும் பிரிட்டனும் அதிக அக்கறை எடுத்து வந்திருக்கிறது.

**நேரு-அயூப் சந்திப்பு**

பாரதப் பிரதமர் நேருவும் பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கானும் நேரில் சந்திப்பதற்கான கட்டம் புதுடில்லியில் நாளை ஆரம்பமாகும். ஆறுவது சுற்றுப் பேச்சுக்களின் போது உருவாகலாம் என்றும் சில முக்கிய பிரச்னைகள் இந்தச் சுற்றுப்பேச்சுகளின் போது தீர்க்கப்படலாம் என்றும் அநேகமாக இந்தச் சுற்றுப்பேச்சில் முன்னேற்றம் காணப்படலாம் என்று தெரியவருகிறது.

## 'அலரி மாளிகை'யில் அரசியல் ஆலோசனை

### அடுத்த வாரம் அரசாங்க கட்சி கூடுகிறது

கொழும்பு, செவ்வாய்

அரசாங்க கட்சி எம். பி.க்கள் அடுத்த வாரத்தில் அலரி மாளிகையில் பிரதமருடன் விருந்தொன்றில் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த புதன்கிழமை அரசாங்க பார்லிமெண்டரிக் குழுக் கூட்டம் கூடும்போதே இந்த விருந்து இடம் பெறுமெனத் தெரிகிறது.

அலரி மாளிகையில் அரசாங்கக் கட்சியினர் கூடும் போது பார்லிமெண்ட் கூட்டத் தொடர் ஒத்திவைப்பினல் ஏற்பட்டுள்ள அரசியல் நிலை பற்றியும் விவாதிப்பார்களென நம்பப்படுகிறது.

எதிர் வரும் பார்லிமெண்ட் கூட்டத்தில் நிகழ்த்தப்படவிருக்கும் சிம்மாசனப் பிரசங்கம் பற்றி எம். பி.க்கள் இந்த கூட்டத்தில் ஆராயவிருக்கின்றனர்.

அடுத்த நிதிவருடத்துக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டுக்கொண்டிருப்பதால் அவசிய தேவையான அம்சங்கள் பற்றி எம். பி.க்கள் எடுத்துக்கூறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில்; கவர்னர் ஜெனரலும் இரு மந்திரிகளும் அமர்ந்திருந்த மேடையில் ஹென்பிட்டிகெதர ஞானசீக தேரோ அமர அனுமதிக்கப்பட்டது குறித்தும் சில எம். பி.க்கள் கேள்விகள் எழுப்பவிருக்கின்றனர்.

## ஒப்பந்தம் பற்றி காங்கிரஸ் யோசிக்கவில்லை

### தமிழ்க்காங்கிரஸ் மாவட்ட கிளைத்தலைவர் அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்

இடதுசாரியினருடன் தேர்தல் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொள்வது சம்பந்தமாக தமிழ்க் காங்கிரஸ் ஒருபோதும் யோசிக்கவில்லை என்று தமிழ்க் காங்கிரஸின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் தலைவர் திரு. ஆ. த. மூர்த்தி 'ஈழநாட்டு'க்கு விடுத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"இடதுசாரியினருடன் தேர்தல் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவது சம்பந்தமாக எப்பகுதியிலிருந்தும் கோரிக்கையோ ஆலோசனையோ கிடைக்கவில்லை. ஆனல் இடதுசாரி ஒற்றுமை முன்னணியினர் மொழிப் பிரச்னையையிட்டுத் தற்போது கடைப்பிடிக்கும் கொள்கையை நாங்கள் வரவேற்கிறோம்" என்று திரு. மூர்த்தி அந்த அறிக்கையில் கூறுகிறார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

**உடுப்பிட்டி எம். பி.**

உடுப்பிட்டி எம். பி. திரு. சிவசிதம்பரம் இதுவரை தமிழ்க்காங்கிரஸிலிருந்து ராஜினமாச் செய்யவில்லை. காங்கிரஸ் கட்சியும் தனது அங்கத்தவர் பட்டியலிலிருந்து அவரது பெயரை நீக்கவில்லை. அவர் இன்னமும் அங்கத்தவராகவே இருந்துவருகிறர். திரு. சிவசிதம்பரத்தின் சில நடவடிக்கைகளும் அவர் பேசிய கருத்துக்களில் சிலவும் எமது கட்சி ஏற்றுக் கொள்ள முடியாதவை என்பது உண்மை தான்.

மொழிப்பிரச்னை சம்பந்தமாக திரு. சு. நடேசபிள்ளை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் நிலைமையைச் சீர்திருத்தும் நல்லெண்ணத்தோடு முன்னேற்றப்பாதையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளாகும். இதை நாம் வரவேற்கிறோம். திரு. நடேசபிள்ளை தமிழ் மக்களுக்கு நன்மையே செய்வார் என்று நம்பலாம்.

---

## அணு ஆயுத சோதனை ரத்து

வாஷிங்டன், 14

இந்த வாரத்தில் அமெரிக்கா நடத்தவிருந்த இரண்டு அணு ஆயுத பரிசோதனைகள் ரத்துசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## இன்று புதிய மேயர் தெரிவு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தின் புதிய மேயரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று நடைபெறவிருக்கிறது. இன்று மாலை 3 மணிக்கு சபை மன்றத்தில் இதற்கான விசேஷகூட்டத்தை மாநகரசபைக் கமிஷனர் திரு. டி. டி. ஜெயசிங்கா கூட்டுகிறர் திரு. பி. எம். ஜோனைப் பதவியிலிருந்து அகற்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதனைத் தொடர்ந்து ஏற்பட்ட காலி ஸ்தானத்திற்கே இத் தெரிவு நடைபெறவிருக்கிறது.

---

## கோணேசர் மண்டலாபிஷேகம்

திருக்கோணமலை, செவ்வாய்

கோணநாயகராலயத்தில் மண்டலாபிஷேக வைபவம் வருகிற வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் ஊர்வலம் மிகச் சிறந்த முறையில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஞாயிற்றுக்கிழமை நிகழும் அன்னதானத்துடன் கோணநாயகர் கும்பாபிஷேகத்தையொட்டிய சகல நிகழ்ச்சிகளும் முடிவடைகின்றன.

நயினதீவு சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கருமங்களைச் செய்வார்.

---

## மந்திரியின் சுற்றுப்பிரயாணம்

கொழும்பு, செவ்வாய்

விவசாய, காணி, நீர்ப்பாசன மின்சார மந்திரி திரு. சி. பி. டி' சில்வா இம்மாதம் 18-ம் திகதி பொலனறுவைக்கு சுற்றுப்பிரயாணம் செய்வார். அடுத்தநாள் அவர் மின்னேரியா செல்வார்.

---

## செல்வி ஸ்ரீஸ்கந்தராசா விசேஷசித்தி

லண்டன், மே 12

நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசாவின் இரண்டாது மகள் செல்வி இந்திரா ஸ்ரீஸ்கந்தராசா கண்வைத்தியத்துறையில் முதல் தடவையிலேயே விசேஷ சித்தி பெற்றுள்ளார்.

---

## சடலங்கள் கிடைக்கவில்லை

யாழ்ப்பாணம், புதன்

எழுவை தீவுக்கருகில் கடந்த வெள்ளிக்கிழமை நிகழ்ந்த படகு விபத்தில் மாண்டவர்களின் மூன்று சடலங்களைப் பொலிஸார் தேடிவருகின்றனர். கடற்படை வள்ளங்களின் உதவியைக்கொண்டு பொலிஸார் கடந்த சில தினங்களாகத் தேடிவருகின்றனர். இதுவரை முயற்சி பயன்தரவில்லை.

குறிப்பு இல. எல். ஏ. 1185

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1963-ம் ஆண்டு மே மாதம் 10-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க கசற் பத்திரிகை இலக்கம் 13,631 (பகுதி IIIல்)பார்க்கவும்,

அட்டவணை

பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிப் பெயர்: யாழ்ப்பாணம்.

கிராமத்தின் பெயர்: யாழ்ப்பாணம் நகரசபை எல்லைக்குள், வட்டாரம் 3, கத்தீரல் - குருநகர்.

காணியின் பெயர்: தேவரிக்குளம் வயல்

ஆரம்பப்பட இல:) ஆரம்பப்பட இல: 2364-ல்
துண்டு இல: ) துண்டு 1

ஐவன் சமரவிக்கிரம
கச்சேரி, உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம், யாழ்ப்பாண மாவட்டம்.
26-4-1963.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

குடிநிலம் 5¾ பரப்பு விற்பனைக்கிருக்கிறது.திருநெல்வேலி கிழக்கு ராமலிங்கம் ஒழுங்கையில். கிணறு, மின்சாரவசதிகளுண்டு. காணியை இரண்டாகப் பிரித்தும் கொடுக்கலாம். விபரங்களுக்கு, டாக்டர் இராசையா, உரும்பராய். 990

### விற்பனைக்கு

பத்து ஏக்கர் நெற்காணி கமரிகுடா, பரந்தன். நீர்ப்பாய்ச்சல் வசதியுடன் மற்றும் விபரங்களுக்கு, க. சதாசிவம், 41, செப்பல் வீதி, யாழ்ப்பாணம் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். 994

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணானந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

## ஜி. ஸி. ஈ. பரீட்சை முடிவுகள்

கொழும்பு, செவ்வாய்
1963-ம் ஆண்டு டிசம்பர்மாதம் நடைபெற்ற ஜி. ஸி. ஈ. பரீட்சையின் முடிவுகள் இவ்வார இறுதியில் வெளிவருமென எதிர்பார்க்கப்படுகிறது. சுமார் 1,55,000 மாணவர்கள் இந்தப்பரீட்சையில்தோற்றினர்கள். விஞ்ஞான பாடங்களாகிய 'பிசிக்ஸ்' 'கெமிஸ்றி' கேள்வித்தாள்கள் பரீட்சைக்கு முன்பே வெளியானதைத் தொடர்ந்து மார்ச் மாதம் மீண்டும் இப் பாடங்களில் பரீட்சை நடைபெற்றது.

# செஞ்சிலுவை முத்திரை அரசாங்கம் வெளியிடாது

கொழும்பு, செவ்.
செஞ்சிலுவை சங்க நூற்றாண்டு ஞாபகமாக விசேஷ முத்திரை வெளியிடுவதில்லையென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

திரு. ஜே. ஹென்றி டோனன்ருல் ஆரம்பிக்கப்பட் உலக செஞ்சிலுவைச் சங்கத்தின் நூருவது ஆண்டு விழா இவ்வருடம் கொண்டாடப்படுகிறது.

ஏற்கனவே 135 நாடுகள் இந்தசரித்திரப்பிரசித்திபெற்ற தினத்தை விசேஷ தபால் முத்திரைகள் வெளியிட்டு கொண்டாடத் தீர்மானித்துள்ள சில நாடுகளில் விசேஷ தபால் முத்திரைகள் வெளியிடப்பட்டுள்ளன. பௌத்த சங்கங்களும் மற்றச் சங்கங்களும் இலங்கைத் தபால் முத்திரையில் செஞ்சிலுவை அடையாளம் இடம் பெறுவதையிட்டு ஏற்பட்டுள்ள தகராறு காரணமாகவே விசேஷ முத்திரை வெளியிடப்படமாட்டாது என்று அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கனடா, பிரான்ஸ், ஜேர்மனி நோர்வே, இந்தியா, கொலம்பியா, சீனு, லாவோஸ், நெதர்லாந்து, நியூஸிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான், பெல்ஜியம், பாகிஸ்தான், ஹங்கேரி, வடக்கு, தெற்கு வியட்னும், தென்கொரியா, காங்கோ, உருண்டி, பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகள் செஞ்சிலுவை அடையாளம்பொறித்த தபால் முத்திரைகள்வெளியிட்டுள்ளனவென்றும்இச்சரித்திரபிரசித்திபெற்ற தினத்தில் செஞ்சிலுவை முத்திரை அடையாளம் பொறிதத தபால் முத்திரை வெளியிடுவதை சிலர் எதிர்ப்பதால் அரசாங்கம் விசேஷ முத்திரை வெளியிடாதுஎன்றும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

செஞ்சிலுவை ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்ததாவது:- செஞ்சிலுவைச் சங்கம் ஒரு மனிதத்தன்மையுள்ளதும்,அரசாங்க சார்பற்றதும் மதசார்பற்றதுமான விதத்தில் மனிதர்களுக்கு சேவை செய்துவருகிறது. சங்கம் சாதி மத, நிற, அரசியல் வேறுபாடின்றி பணியாற்றிவருகிறது. செஞ்சிலுவைசங்கம், மக்களின் அன்புக்கும் தியாகத்திற்கும் தன்னலமில்லாத சேவைக்கும் உலக சகோதரத்துவத்திற்கும் கட்டுப்பட்டு, தனிப்பட்டஎந்த ஒரு மதத்திற்காகவுமின்றி, எல்லோருக்குமாக சேவை செய்கிறது.

இம்மாதம் 8ந் திகதி இந்தியா இத்தினத்தை விசேஷ முத்திரை வெளியிட்டு கொண்டாடியது.

## கூட்டுறவு பாற் பண்ணை வருடாந்தக் கூட்டம்

சுழிபுரம், திங்கள்
வலிகாமம் மேற்கு கூட்டுறவு பாற்பண்ணை ஆருவது வருடாந்த பொதுக்கூட்டம் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு. சு. கந்தசாமி ஜே. பி. தலைமையில் நடைபெற்றது. வருடாந்த அறிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் வலிகாமம் மேற்கு பகுதி கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை பேசுகையில் யாழ்ப்பாணப் பகுதியில் நல்ல மாட்டுப்பாலை விநியோகம் செய்வதற்கு கூட்டுறவுப் பகுதியார் அதிகம் உழைத்து வருகின்ருர்கள் என்றும் நல்ல இன மாடுகளை வளர்த்துக் கொழுப்புச் சத்துள்ள பாலை சங்கங்களுக்கு விநியோகிக்க வேண்டியது அங்கத்தவர்களின் கடமையாகும் என்றும் கூறினர்.

எமது நாட்டின் பொருள் வளத்தை பெருக்குவதுடன் நாட்டில் வாழும் மக்கள் நல்ல திடகாத்திர முள்ளவர்களாக வாழ்வதற்கு நல்ல சத்துள்ள பாலை விநியோகிக்கவேண்டும். கூட்டுறவு உத்தியோகஸ்தர்களின் உதவியுடன் பாற் சங்கம் வளர்ச்சியடைய பாடுபட வேண்டும் என்றும் கூறினர்.

புதுவருட உத்தியோகஸ்தர் தெரிவில் ஆருவது முறையாக ஏகமனதாக திரு. சு. கந்தசாமி ஜே. பி. தலைவராக தெரிவு செய்யப்பட்டார். உப தலைவர்கள்: திரு. செ. சிறீனிவாசன், திரு. வே. சேதுகாவலர் ஆகியோரும் தனதிகாரியாக திரு. ப. மயில்வாகனமும், நிர்வாகசபை உறுப்பினர்களாக திருவாளர்கள் த. குமாரசாமி, சி. கந்தையா, க. தம்பையா, க. கந்தசாமி.

## தேசிய கலைவிழா

மட்டக்களப்பு, செவ்.
மட்டக்களப்பு தமிழ்க்கலா மன்றத்தினர் தேசிய அடிப்படையில் தேசியக்கலைவிழா ஒன்றினை நடத்த முயற்சிகள் எடுத்து வருகின்றனர். ஈழநாட்டில் சாதனை புரிந்த பலரும் இவ்விழாவில் பாராட்டப்படவிருக்கின்றனர்.

## சந்தேகநபர் சரணடைந்தார்

மாவிட்டபுரம், செவ்
உடுப்பிட்டி கிராமசபைத் தெரிவிலிருந்து ஏற்பட்ட தகராறு காரணமாக முருகன் தங்கவேலு என்பவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இத் துப்பாக்கிச் சம்பவம் சம்பந்தமாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த கொந்தரையைச் சேர்ந்த ராஜதுரை அப்புத்துரை என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் சரணடைந்தார். மாஜிஸ்டிரேட் சந்தேகநபரை இம்மாதம் 20-ம் திகதி வரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். இச்சம்பவம் சம்பந்தமாக வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புதிய கிராம சேவகரான நல்லதம்பியும், கிராமசபையின் அங்கத்தவரான சின்னையா சிவராசாவும் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கி. ச. முன்னுள் தலைவருக்குப் பாராட்டு

கைதடி, செவ்வாய்
நாவற்குழி கிராமசபை முன்னுள் தலைவர் திரு. இ. வேலாயுதருக்கு கைதடி 1-ம் வட்டார மக்கள் பாராட்டு விழாவொன்று நடத்தினர். திரு. பொ. செல்லத்துரை தலைமையில் இப்பாராட்டு விழா நடைபெற்றது.

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. கு. வி. செல்லத்துரை பேசுகையில் அரசாங்கம் ஆசிரியர்களின் அரசியல் உரிமைகளைப் பறித்தது அநீதியெனக் கூறினர்.

யாழ்ப்பாணம் சிகரெட் புகையிலை உற்பத்தியாளர் சமாஜக் காரியதரிசி திரு. க. இ. குமாரசாமி பேசுகையில், திரு. இ. வேலாயுதர் யாழ்ப்பாணத்திலுள்ள ஐக்கிய இயக்கம் முழுவதிலும் பங்கு பற்றியுள்ளார் எனவும் அவரின் சேவையைப் பாராட்டி அரசாங்கம் சமாதான நீதிபதிப் பட்டம் வழங்க சாவகச்சேரிப் பிரதிநிதி ஆவனசெய்யவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். திரு. வ. ந. நவரத்தினம் பேசுகையில், திரு. வேலாயுதரைப் போல் ஒவ்வொரு கிரமத்திலும்ஒவ்வொரு வேலாயுதர் தோன்றினல் நாடு முன்னேறுமெனக் குறிப்பிட்டார். பின்பு செல்வி க. சிவபாக்கியம், திரு. சே. சின்னத்தம்பி, தலைமையாசிரியர் செ. சிவப்பிரகாசம், திரு. சி. மு. துரையப்பா முதலியோர் பேசினர். ஈற்றில் புதிய பைசிக்கிள் ஒன்று அன்பளிப்பாக திரு. இ. வேலாயுதருக்குக் கொடுக்கப்பட்டது. பல சங்கங்களிலிருந்து பாராட்டுப் பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டன. திரு. வேலாயுதர் பாராட்டுரைக்கு நன்றிதெரிவித்துப் பேசினர்.

## தேர்த்திருப்பணிச் சபை

கோப்பாய், செவ்வாய்
கோப்பாய் கண்ணகையம்மன் தேர்த்திருப்பணி சபையின்வருடாந்தப்பொதுக்கூட்டம் ஆலய மண்டபத்தில் திரு. வ. கந்தப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாக சபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் க. வேலுப்பிள்ளை, உபதலைவர் க. இ. குமாரசாமி, காரியதரிசி. தி. சுப்பிரமணியம், உபகாரியதரிசி செ. நடராசா, தனதிகாரி. த. சுப்பிரமணியம். மற்றும் 24 பேர் உள்ளூர்ப் பிரதிநிதிகளாகவும், 15 பேர் வெளியூர் பிரதிநிதிகளாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை உத்தியோக நிமித்தம் இட மாற்றம் பெற்றுச் செல்வதையிட்டு பாராட்டுரைகள் வழங்கப்பட்டன.

## துறைமுக தொழிலாளர் ஆறுதலாக வேலை செய்கின்றனராம்

கொழும்பு, செவ்வாய்
துறைமுக நிர்வாகிகள் ஆறுதலாகவேலைசெய்யும்காரணமாக, உணவுப்பொருட்கள்பழுதடைந்துவருகின்றனவென்றுஉணவுப்பொருள் இறக்குமதியாளர்கள் முறைப்பாடு செய்துள்ளார்கள்.

இந்த முறைப்பாடு குறித்து ஒரு இறக்குமதியாளர், 5,000 தொன் பம்பாய் வெங்காயங்கள் இம்மாதம் 7-ம் திகதி துறைமுகத்தை வந்தடைந்ததென்றும், இம் மாதம் 10-ம் திகதியே இறக்குமதி செய்யப்பட்டதென்றும் தெரிவித்தார்.

சிறந்த முறையில் துறைமுக நிர்வாகம் நடைபெற்றுல், உணவுப் பொருட்கள் பழுதடையாமலிருக்குமென்று மேலும் அவர் தெரிவித்தார்.


**BIOLOGY**

in English
( For G. C. E. Ord. Level )

By
**Ramakrishnan** and **Puthrasingam**

This book caters fairly fully for the G. C. E. ord. level syllabus. The book had been written with a **functional** and **ecological** bias. In conformity with the amended syllabus in Biology, matter has been completely revised to cater to its needs. New and large diagrams had been added. The authors feel that this book will be useful to both teachers and students of natural science.

**The book had been approved by the Director of Education as a class text.**

Copies can be had from all leading book sellers.

400 Pages Price 11-25 300 Diagrams

The Tamil edition of Biology ( உயிரியல் ) can also be had from leading book sellers.



பிரீடம்' மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது
'பிரீடம்' மார்க் கற்பூரம்
என்றே கேட்டு வாங்குங்கள்.
இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள்,
பிறீ லங்கா இன்டஸ்ட்றீஸ்.
மினுவாங்கொட.

இந்தோனேஷியாவில்

# ஏராளமான சீனக் கடைகள் நாசம்!

## ஆறு நகரங்களில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

ஜாகர்த்தா, மே 14

**சீனர்களுக்கு எதிராக இந்தோனேஷிய இளைஞர்கள் நடத்திவரும் ஆர்ப்பாட்டம் காரணமாக ஆயிரக்கணக்கான சீனர்கள் தங்களது வீடுகளை விட்டு வெளிவராமல் இருக்கின்றனர் என்றும், ஆறு நகரங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் விளைவாக ஏராளமான சீனக்கடைகள் நாசப்படுத்தப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது.**

சீனர்களுக்கு எதிராக இந்தோனேஷியாவிலுள்ள பாண்டுங்நகரில் இந்தோனேஷிய இளைஞர்களின் ஆர்ப்பாட்டம் காரணமாக இந்த நகரத்தில் 90 சதவிகித சீனக்கடைகள் நாசப்படுத்தப்பட்டன என்று அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். இந்த நகரத்தில் சீனர்களுக்குச் சொந்தமான கட்டடங்களையும் வீடுகளையும்கூட இந்தோனேஷியர்கள் பாழாக்கினர் என்றும் சீனர்களின் கார்கள் தீ மூட்டப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தோனேஷியர்களின் எதிர்ப்பு நடவடிக்கை காரணமாக நகரங்களில் சீனர்களின் வியாபாரம் ஸ்தம்பித்தது. வீதிகளில் சீனர்களின் நடமாட்டம் காணப்படவில்லை.

**பெரும் கும்பல்**

கடந்த வெள்ளிக்கிழமை சுமார் ஆயிரம் இந்தோனேஷியர்கள் எந்தவிதமான தடையுமின்றி நகரின் முக்கிய வீதிகளிலெல்லாம் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இவர்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று சீனக் கடைகளைத் தகர்த்தெறிந்தனர். ஏராளமான கடைகளுக்கு தீ மூட்டப்பட்டது. அதிகமான கடைகள் தகர்த்தெறியப்பட்டன.

இந்தப் பகுதியிலுள்ள இந்தியர்களின் கடைகளுக்கு எந்தவிதமான அபாயமும் நேரிடவில்லையென்று இந்தோனேஷிய அரசாங்க அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மத்திய ஜாவாவில் சில தினங்களுக்கு முன்னர் இந்தோனேஷிய இளைஞர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதில் துப்பாக்கிப் பிரயோக சம்பவங்களும் இடம்பெற்றன. ஆனால் கலகக்காரர்களோ மற்றும் எவரோ இதில் இறக்கவில்லை.

பாண்டுங் நகரத்தில் இப்பொழுது பொலிஸாரும் ராணுவத்தினரும் கடுமையான நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதால் இப்பொழுது அமைதி நிலவுகிறதென்றும், பாண்டுங் நகரத்தில் கலகக்காரர்களின் நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் கடைசியாக வெளியான செய்திகள் கூறுகின்றன.

# "பிரதமர் ஸ்ரீமாவோ புதுடில்லி வருவார்"

## இலங்கை - இந்தியர் பிரச்னைகுறித்து விவாதிக்க

புதுடில்லி, மே 14

பாரதத்துக்கும் இலங்கைக்குமிடையே நீண்டகாலமாக இருந்துவரும் இலங்கை-இந்தியர் பிரச்னை குறித்து பாரதப் பிரதமர் நேருவுடன் விவாதிப்பதற்காக இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கூடியவிரைவில் புதுடில்லிக்கு விஜயம் செய்யலாம் என்று இலங்கை ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தற்பொழுது இங்கு விஜயம் செய்துள்ள திரு. ஜயவர்த்தன பாரதப் பிரதமர் நேருவையும் சந்திப்பார் எனத் தெரிய வருகிறது.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன இதுசம்பந்தமாக மேலும் தெரிவித்ததாவது: "இலங்கைவாழ் இந்தியர்களை மூன்று ரகத்தினராகப் பிரிக்கலாம். (1) இலங்கைப் பிரஜைகளாகக்கூடியவர்கள். (2) தற்காலிக குடியிருப்பு பர்மிட்டுகள் உடைய இந்தியர்கள். (3) தகுந்த தூண்டுதல்களின் மூலம் இந்தியாவுக்குத் திரும்புமாறு கோரப்படக்கூடியவர்கள்.

இந்த மூன்று ரகத்தினர்களில் மூன்றாவது ரகத்தினர் பற்றிய திட்டம் முயற்சிக்கப்பட்டது. ஆனால் சரிவரச் செயல்படவில்லை. இந்த மூன்றாவது திட்டம் செயல்படுமானல் ஒரு பிரச்னையாக விளங்கும் நபர்களின் எண்ணிக்கை தற்போதைய சுமார் மூன்று லட்சம் என்ற மதிப்பீட்டைவிட மிகவும் குறைவாகவேயிருக்கும்.

சீன-இந்திய எல்லைத் தகராறில் எனது கட்சியும் இதர கட்சிகளும் இந்தியாவின் நிலையை பூரணமாக ஆதரிக்கின்றன. ஆக்கிரமிப்புச் சம்பந்தப்பட்டவரை, இலங்கை மக்கள் நடுநிலையாயிருக்கும் பிரச்னையில்லை. ஆக்கிரமிப்பை எப்படியும் கண்டித்தாகவேண்டும்.

இலங்கைவாழ் இந்தியர் பிரச்னை குறித்து இந்தியப்பிரதமருடன் இலங்கைப் பிரதமர் விவாதிக்கவரும் சமயத்தில், பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தம்முடன் எதிர்க்கட்சித் தலைவர்களையும் அழைத்துச் செல்லலாம்."

---

## சாம்ராஜ்ய வர்த்தக மகாநாடு

லண்டன், மே 14

லண்டனில் நடைபெறும் காமன்வெல்த் வர்த்தக மந்திரிகள் 2 நாள் மகாநாட்டில் நேற்று அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு சந்தைகளை ஆரம்பிப்பது குறித்து பேச்சுக்கள் நடைபெற்றன. இந்த மகாநாட்டில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்டு மொத்தம் 16 நாடுகள் கலந்துகொள்கின்றன.

இம் மகாநாட்டில் கலந்துகொண்ட சாம்ராஜ்ய வர்த்தக மந்திரிகளுக்கு நேற்று மதியம், எலிஸபெத் மகாராணியார் பகல் போசன விருந்தொன்று அளித்தார்.

## 9 சிறுவர்கள் எரிந்து மரணம்

கராச்சி, மே 14

கராச்சியில் நேற்று ஏற்பட்ட ஒரு பிளாஸ்டிக் தீவிபத்தில் மொத்தம் ஒன்பது குழந்தைகள் எரிந்து மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## டாக்டர் ராதாகிருஷ்ணன்

காபூல், மே 14

ஆப்கானிஸ்தானுக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன நேற்று அரசாங்க துணி ஆலையையும் இயற்கையழகு நிறைந்த தேசிய பூங்காவையும் பார்வையிட்டார்.

இந்திய ராஷ்டிரபதி பதவியை ஏற்று நேற்றுடன் ஓராண்டு காலம் முடிவதையிட்டு டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு நேற்று ஆப்கானிஸ்தான் மன்னர் முக்கிய பிரமுகர்கள் இங்குள்ள பாரத அதிகாரிகள் மற்றும் பலர் வாழ்த்துக்கள் வழங்கினர்.

டாக்டர் ராதாகிருஷ்ணனை பாராட்டும் முகமாக, அவருக்கு நேற்று இந்தியாவில் தயாரிக்கப்பட்ட இனிப்புப்பண்டங்களும், இந்தியாவிலிருந்து விசேஷமாக வரவழைக்கப்பட்ட வாழைப்பழங்களும் கொடுக்கப்பட்டன.

ஆப்கானிஸ்தானிலுள்ள பத்திரிகைகள் யாவும் டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கு முதலிடம் கொடுத்திருந்தன.

---

## சாம்ராஜ்ய பிரஜைகள்

பிரிட்டன், மே 14

சாம்ராஜ்ய குடியேற்றச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட முதல் ஒன்பது மாதங்களுக்குள் சுமார் இரண்டு லட்சத்து முப்பதினாயிரம் சாம்ராஜ்ய பிரஜைகள் பிரிட்டனில் அனுமதிக்கப் பட்டுள்ளார்கள்.

---

## குருஷ்சேவ் பதில்

லண்டன், மே 14

அணு ஆயுத சோதனைத்தடை ஒப்பந்தத்தில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டை சம்பந்தமாக ரஷ்யப் பிரதமர் திரு. குருஷ்சேவ் பிரிட்டிஷ் பிரதமர் மாக்மிலனுக்கு பதிலனுப்பியுள்ளார் என வெளிநாட்டு காரியாலய அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரால்ட் மாக்மிலனும், அமெரிக்க ஜனாதிபதி திரு கென்னடியும் கூட்டாக அனுப்பிய கடிதமொன்றுக்கே பிரதமர் குருஷ்சேவ் பதிலனுப்பியுள்ளார்.

---

## நாட்டின்பாதுகாப்புக்கே புதிய வரிகள்

— மொரார்ஜி

சூரத், மே 14

சூரத்தில் நேற்று பொதுக் கூட்டமொன்றில் இந்திய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் பேசுகையில், நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டுத்தான் புதிய வரிகள் போடப்பட்டன என்றும் பொதுவாக மக்கள் இதை ஏற்றுக்கொண்டிருக்கிருர்கள் என்றும் கூறினர்.

சீன ஆக்கிரமிப்பினலும், தாக்குதல்களினலும் நாட்டில் ஏற்பட்டிருக்கும் நிலைமையை நன்ரு[illegible] மக்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். புதியவரிகள்சிறிது அதிகமாவிருந்தாலும் மக்கள் இதை ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்றும் அவர் கூறினர்.

# ஈராக், ஸிரியா அரசாங்கம் அமைக்கப்பட்டது

பேருட், மே 14

கடந்த சனிக்கிழமை ஈராக் பிரதமர் பதவியிலிருந்து ராஜிநாமாச் செய்த மேஜர் ஜெனரல் அகமட் ஹஸன்பக்ர், புதிய அரசாங்கமொன்றை அமைத்துள்ளார் என்று பாக்தாத் வானெலி அறிவித்துள்ளது.

இதே சமயத்தில், ஸிரியா பிரதமர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்த திரு. சலாபிற்ருவும் புதிய அரசாங்கமொன்றை அமைத்துள்ளார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதிய ஈராக் மந்திரி சபையில் பிரதமராக மேஜர் ஜெனரல் அகமட்ஹஸனும், பாதுகாப்பு மந்திரியாக லெப்டினன்ட் ஜெனரல் சலி மதி அமாஸும், உதவிப் பிரதமராக அலி சலி அல்சாடியும் இருப்பார்கள். புதிய ஈராக் மந்திரி சபையில் மொத்தம் 21 பேர் இருப்பார்கள்.

ஸிரியா மந்திரிசபை ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து சில மணி நேரங்களுக்குப் பின்னர், ஈராக் மந்திரிசபை ராஜிநாமா செய்தது.

# "கனடாவின் ஆதரவு பாரதத்துக்கு உண்டு"

## சீன - பாரத எல்லைத்தகராறு பற்றி கனடா பிரதமர்

ஒட்டாவா, மே 16

**பாரதத்துக்கும் சீனவுக்குமிடையேயான எல்லைத் தகராறில் கனடாவின் ஆதரவு பாரதத்துக்கு இருக்கும் என்று கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் நேற்று தெரிவித்துள்ளார்.**

தற்பொழுது கனடாவுக்கு விஜயம் செய்திருக்கும் இந்திய பொருளாதார, தற்காப்பு விவகாரங்களுக்கான இணைப்பு மந்திரி திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி நேற்று கனடாப் பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸனையும், கனடா வெளியுறவு மந்திரி திரு. பால்மார்ட்டினையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர். இந்தியாவுக்கான கனடாவின் பொருளாதார, பாதுகாப்பு உதவிகள் குறித்து திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரும் திரு. பால்மார்ட்டினும் பேச்சுக்கள் நடத்தினர்கள். சுமார் இரண்டு மணி நேரம் வரை நடைபெற்ற இந்தப் பேச்சுக்களின்போது, கனடாவிலுள்ள பாரத ஹைகமிஷனரும் கலந்து கொண்டார்.

நேற்று, கனடா பிரதமர் திரு. லெஸ்டர் பியர்ஸன் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில்; பாரதத்துக்கும் சீனவுக்குமிடையேயான எல்லைத்தகராற்றில் கனடாவின் ஆதரவு பாரதத்துக்கு உண்டு என்று கூறினர்.

கனடா-பாரத உறவுகள் முன்பிருந்ததிலும் பார்க்க வலுவடையும். எல்லைத் தகராற்றில் பாரதத்துக்கு உதவிகள் அளிக்க கனடா ஆயத்தமாகவிருக்கிறது. பாரதத்தின் நிலை எனக்கு நன்ருகத் தெரியும் என்ற காரணத்தினல் எமது அரசாங்கம் பாரதத்துக்கு தொடர்ந்து உதவியளிக்கும் என்றும் திரு. பியர்ஸன் கூறினர்.

**டி. டி. கே. யின் சுற்றுப்பயணம்**

கனடா, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யும் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, இந்தியாவின் பாதுகாப்பு, பொருளாதார அபிவிருத்தி தேவைகள் குறித்து மூன்று தேச அரசாங்கங்களுடனும் பேச்சுக்கள் நடத்துவார். கனடாவில் நேற்று பேச்சுக்கள் நடத்திய திரு. டி. டி. கே., இன்று தொடர்ந்தும் பேச்சுக்கள் நடத்துவார். இதன் பின்னர் இவர், வாஷிங்டனுக்குச் செல்வார் என்றும் அங்கு சுமார் 10 நாட்கள் தங்கிய பின்னர், இம்மாதம் 28-ம் திகதி லண்டன் செல்வார் என்றும் தெரிய வருகிறது.

# "பாதுகாப்பு ஏற்பாடுகள் நிரந்தரமாகி விட்டன

## தைரியத்தை பாரதம் கைவிடாது"

—திரு. சாவன்

லக்னே, மே 14

பாரத மக்களிடையே பாதுகாப்பு மனப்பான்மையைத் தோற்றுவிக்க வேண்டுமென்று பாரத பாதுகாப்புமந்திரி திரு. ஒய். பி. சாவன், லக்னேவில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

சீனவின் ஆக்கிரமிப்பு காரணமாகவும் அதன் தாக்குதலின் விளைவாகவும் பாரதத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவும் நிரந்தரமாக்கப்பட்டுள்ளனவென்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது: "எந்தச் சந்தர்ப்பத்திலும் எப்படியான சூழ்நிலையிலும் பாரதம் தனது தைரியத்தை கைவிடாது. பாரதத்தின் வரலாறு இதற்கு அத்தாட்சியாகும்.

சீனத் தாக்குதல் காரணமாக எமது நட்புறவு நாடுகள் பாரதத்துக்கு உதவி புரிகின்றன. நட்புறவு நாடுகளின் உதவிகள் எமக்குத் தேவைப்பட்டாலும் அந்த உதவிகளை நாம் நிரந்தரமாகக் கூடாது. எமது நாட்டை காப்பாற்ற நாம் முன்வர வேண்டும். பாதுகாப்பு முயற்சியில் நாம் ஈடுபடல் வேண்டும். பொருளாதார உற்பத்தி அதிகரித்தால்தான் எமதுநாட்டை நாம் பாதுகாக்கக் கூடியவர்களாவோம்.

கொழும்பில் கூடிய ஆறு மண்டல சார்பற்ற நாடுகள் தெரிவித்த யோசனைகளைப் பாரதம் முழுமையாக ஏற்றுக்கொண்டது. ஆனல் கொழும்பு யோசனைகள்பற்றி சீன இன்னும் எந்தவிதமான திட்டமான பதிலையும் வெளியிடவில்லை. கொழும்பு யோசனைகளின் அடிப்படையில் சீன, தான் ஆக்கிரமித்த பகுதிகளிலிருந்து வெளியேறினல் மட்டுமே எல்லைத் தகராறு குறித்து சீனவுடன் நாம் பேச்சு நடத்த முடியும். கொழும்பு யோசனைகள்பற்றி சீன திட்டமான பதிலைக்கூற வேண்டும்.

## மணி வாக்கு

மூலதனம் என்பது தீமையல்ல. அதைத் தவருகப் பயன்படுத்துவதே தீங்காகும். ஏதாவது ஒரு வகையில் மூலதனம் எப்போதும் தேவையே. பணமுள்ளவர்கள் ஏழைகளின் நன்மைக்காக அதைத் தர்மகர்த்தாக்கள் போலப் பயன்படுத்த வேண்டும்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone 389

யாழ்ப்பாணம்சோபகிருது ஆண்டு வைகாசி மீ 1 உ (15 5-63)

## அமெரிக்காவில் நிறவெறி

நிறவெறியர்களை அடக்க அமெரிக்க ஜனதிபதி கென்னடி மீண்டும் பெடரல் துருப்புக்களை தென்மாகாணத்துக்கு அனுப்பியுள்ளார். முந்திய முறைகளில் ஓரளவு பயனளித்தது போல், இம்முறையும் இதனல் வெறியர்கள் அடங்கக் கூடும் இவ்வித நடவடிக்கையை ஜனதிபதி முன்கூட்டியே எடுத்திருக்க வேண்டும் அப்படிச் செய்திருந்தால், அங்கு கறுப்பு நிறத்தவர்களுக்கு கஷ்டநஷ்டங்கள் பெருகாமல் தடுத்திருக்கலாம்.

மனிதருக்கு மனிதர் சரிநிகர் சமானமென்ற கொள்கை ஐ நா. மனித உரிமைசாஸனத்தின் மூலம் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. என்றுலும் அது பூரணமாக அமுலுக்கு வரவில்லை. நிறவெறி அமெரிக்காவின் தெற்கு மாகாணங்களிலே அடிக்கடி தலைதூக்கிக் கறுப்பு நிறத்தவர்களான நீக்கிரோக்களுக்குப் பெரும் சங்கடம் அளித்து வருகின்றது. தாங்களும் மானத்துடனே மற்றவர்களைப்போல் சரிசமமாக மரியாதையாக வாழ வேண்டுமென்று, தங்கள் மனித உரிமைக்காக அமெரிக்க நீக்கிரோக்கள் அமைதியான முறையிலே அங்கு கிளர்ச்சியை ஆரம்பித்து நடத்த முன்வந்தனர். மாகாண கவர்னர், நீக்கிரோக்களின் தலைவரான மார்ட்டின் லூதர்கிங் என்பவரைக் கைது செய்தபின், நிலைமை, மோசமாயிற்று. நிறவெறியர்கள், வெடிகுண்டுகளை வீசியும், கொள்ளையடித்தும் நீக்ரோவர்களைப்பலவித இம்சைகளுக்கும் உள்ளாக்கி வருகின்றனர். ஜனதிபதி கென்னடி தலையிட்டு, பெடரல் துருப்புகளை அங்கு அனுப்பி வைத்துள்ளதால் இனி நிலைமை மேம்படக்கூடும்.

என்றுலும் நிறவெறி என்பது மிக நாள்பட்ட வியாதி. ஒருசில துருப்புகளால் சற்றே இது அடங்கக்கூடுமென்றுலும் இதை அறவே நீக்க முடியாது. ஜனநாயக சமதர்மம் பேசப்படும் இக்காலத்தில், நிறவெறிகளுக்கு நியாயபுத்தியுள்ள பொதுமக்களிடையே ஆதரவிராது. இவ்வெறியர்களைப்படிப்படியாக நீக்க ஆக்க முறையிலே தீவிர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்குமென்று நீக்கிரோக்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ய முற்பட்டுள்ளனர். ஆத்திரமூட்டப்பட்டாலும், அன்பினலே அஹிம்ஸா வழியிலேதான் அவர்கள் பூரண வெற்றிபெற முடியும். உலக அனுதாபமும் ஆதரவும் அவர்கள் பக்கம் இருப்பதால், அவர்கள் கோரிக்கை நிறைவேறுமென்பது உறுதி.

அமெரிக்காவில் மட்டுமல்ல, நம் இலங்கையிலே, யாழ்ப்பாணத்திலேகூடவெவ்வேறுவெறிகள் மக்களிடையே இருந்து வருவது பகிரங்க ரகசியம். இங்கு சாதிவெறி, மதவெறி, மொழிவெறி, பணவெறி முதலியன கிளம்பி சமூக வாழ்வில் ஒற்றுமை ஏற்பட முடியாமல் தடுத்து வருகின்றன. அமெரிக்காவில் இப்போது நடைபெறும் கிளர்ச்சிகள் நமக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அடக்கப்பட்டுள்ளவர்களைத் தூண்டிவிட பலசக்திகளும்காத்துள்ளன. சமூகத்தில் மனிதருக்குமனிதர் அநீதிசெய்து ஒதுக்கி ஒடுக்குவது இந்தஜனநாயக யுகத்தில் நீண்டகாலம் சகிக்கப்படமாட்டாது. அமெரிக்கா வெள்ளைநிற வெறியர்களைக் கண்டிக்கு முன்பாக இங்கு நம்மிடையேயுள்ள சாதி முதலிய வெறிகளை உணர்ந்து இவற்றை நீக்க நாம் முற்பட வேண்டும். அதுவே விவேகமானதுடன் நமது இன்னல்கள் தீர்ந்து நாம் முன்னேறவும் அது வழி காட்டும்.

# விவேகானந்தரின் சமுதாய சீர்திருத்தம்

—சுவாமி சித்பவானந்தர்—

சமுதயத்தைப்பற்றியும், அதன் உற்பத்தியைப்பற்றியும் அதன் குறிக்கோளைப்பற்றியும் சுவாமி விவேகானந்தர் கொண்டிருந்த கருத்துக்களை நாம் அறிந்துகொள்வது அவசியமாகிறது. சமுதாய வாழ்க்கைக்கும், சமுதாய சேவைக்கும், ஆத்ம ஞானத்துக்கும் அவருடைய கருத்துக்கள் நன்கு பயன்படும்.

உயிர் வகைகள் ஒன்றுகூடி ஒழுங்காகவும் திட்டம் வகுத்தும் வாழுமிடத்து அது சமுதாய வாழ்வு எனப்படுகிறது. ஜீவர்களுக்கு சமுதாய வாழ்வு துவக்கத்தில் இல்லை. அது இடையில் வந்து வாய்க்கிறது; இறுதியில் ஞான நிலையை எய்துங்கால் ஞானி சமுதாய வாழ்க்கையைக் கடந்து அதீதத்துக்குப்பாகவேண்டும். ஆகவே சமுதாய வாழ்வுசாசுவதமானதல்ல. இடையில் தோன்றி ஜீவர்களைப் பெரிதும் பக்குவப்படுத்திவிட்டு இடைவழியில் அது நின்றுவிடுகிறது. ஆதலால் ஆத்ம சாதகர்கள் சமுதாய வாழ்க்கையில் மிகைபட்ட பற்றுதல் வைக்கலாகாது; சமுதாய வாழ்க்கையில் கட்டுண்டும் இருக்கலாகாது.

மனிதன் எவ்வளவுதான் முயற்சியெடுத்து எத்தகைய சீர்மையில் சமுதாய வாழ்க்கையை அமைத்து வைத்தாலும் அதில் ஏதேனும் ஓர் இடத்தில் ஓரளவுக்குக் குறைபாடும் இருக்கும். குற்றமில்லாத நிறை சமுதாயம் எக்காலத்திலும் எந்தத் தேசத்திலும் இருந்தது மில்லை: இனி இருக்கப்போவது மில்லை. ஒரு சமுதாயத்துக்குரிய மக்களிடத்து ஆற்றலும், அறிவும் அதிகரித்திருக்குமாகில், அவர்களுடைய ஆற்றலுக்கு ஏற்ப அவர்கள் தீவிரமான வாழ்க்கை வாழ்ந்துவருகிருர்கள். அப்பொழுது அவர்களிடத்தில் குற்றம் அதிகம் தென்படாது. ஓர் உபமானத்தைக்கொண்டு அதை இயம்பலாம். ஆற்றுப்பெருக்கெடுத்து நீர் வேகமாக ஓடிக்கொண்டிருக்கும்பொழுது அதனிடத்து மாசுபடிவதில்லை. ஆனல் நீரின் வேகமும் அளவும் குறைந்து. அது தேங்கிநின்று பாயும்பொழுது மாசு அதனிடத்து ஏராளமாகப் படிகிறது. சமுதாயம் அதுபோன்றது. உள்வலிவு குறையும்பொழுது கேடுகள் பலசமுதாயத்தில் தோன்ற ஆரம்பிக்கின்றன. வலிவற்ற சமுதாயம் ஒன்றுக்கு எவ்வளவுதான் சீர்திருத்தங்கள் கொண்டுவந்தாலும் அது மேன்மையுருது. மீண்டும் வலிவு பெறுவது ஒன்றே அது சீர்பெறுதற்கு உற்ற உபாயமாகும்.

சமுதாய சீர்திருத்தத்தைப் பற்றிய அடிப்படைக் கோட்பாடு ஒன்றை சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். சமுதாயத்திலிருக்கும் கேடு கீல்வாதம் போன்றது. கீல்வாத நோயை சரீரத்தில் ஓரிடத்திலிருந்து ஓட்டினல் மற்ருேரிடத்தில் அது தோன்றும். அடியோடு அதை அகற்றிவிடமுடியாது. ஒரு வடிவில் தோன்றுகிற கேட்டை சமுதாயத்தினின்று நீக்கிஞல் மற்ருெரு வடிவத்தில் அது தலையெடுக்க ஆரம்பிக்கும். எனவே பூரண சீர்திருத்தத்தை யாருமே சாதித்துவிட முடியாது. ஒரு காலத்தில் நலமயிருக்கின்ற சமுதாய ஏற்பாடு ஒன்று மற்ருெரு காலத்தில்கேடாக மாறுகிறது. அத்தகைய கேடு நிலைத்திருப்பதற்கு இடந்தராது சூழ்நிலையை மாற்றியமைத்தால் கேடும் தானக மறைந்துபட்டுப்போம்.

சமுதாயமொன்றில் கேடுகள் பல தோன்றும்பொழுது சீர்திருத்தக்காரர்களும் முன்வருகின்றனர். இந்தச் சீர்திருத்தக்காரர்களைப்பற்றிய அடிப்படைக் கோட்பாடு ஒன்றை அறிவுடையோர் ஞாபகத்தில் வைத்திருப்பது அவசியமாகிறது. சீர்திருத்தக்காரர்கள் பெரும்பாலும் வெறிபிடித்தவர்களாக இருப்பார்கள். சமுதாயத்தைத் தாங்கள் விரும்புகிற முறையில் திருத்தியமைக்க அவர்கள் தீவிரமாக முயலுகின்றனர். அவர்களைப் பிடித்திருக்கும் வெறியின் விளைவாக ஒரு சிறியஅளவு நலன் செய்வதற்கிடையில் பெருங்கேட்டையும் தங்களையறியாது சமுதாயத்தினுள் வேறு ஏதேனும் ஒருவிதத்தில் அவர்கள் புகுததுவிடுவர். ஆகவே பொதுவாக வெறிபிடித்த சமுதாய சீர்திருத்தக்காரர்கள் உலகுக்கு நலன் செய்பவர்கள் போன்று தென்படுவர்; உண்மையில் கேட்டையே அவர்கள் பெரிதும் விளைவித்து விடுகின்றனர். தங்களையறியாது மற்றொரு பெரிய தீமையை அவர்கள் உலகில் பரப்புகின்றனர். சமுதாயத்தில் இருக்கிற கேடுகளைப் பற்றி மேடைகளின் மீதிருந்து கொண்டு பெருபிதமாகப் பேசுகின்றனர். தீமைகளை நினைப்பதற்கு ஏற்றவாறு அத்தீமைகளை அப்படி நினைப்பவன் மேலும் வளர்க்கிறன். இது வாழ்க்கையைப் பற்றியதத்துவம். ஆனல் இது அவர்களுக்கு விளங்குவதில்லை. உலகில்உள்ள தீமைகளைப் பற்றி ஏராளமாகப் பிறர்க்கெடுத்துப் பேசுவதற்கேற்ப அத்தீமைகளைப் பிறர் உள்ளங்களிலும் அவர்கள் வளர்த்து வருகிருர்கள்.

வேதாந்த வாழ்க்கைக்கும் சமுதாய சீர்திருத்தத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. சமுதாயத்தில் சீர்திருத்தங்கள் செய்ய முயன்று வருகின்றவர்கள் வேதாந்திகள் ஆவதில்லை. மற்று,வேதாந்திகளோ சமுதாய சீர்திருத்தத்தைப்பற்றி ஒன்றும் நினைப்பதில்லை. அப்படி உதாசீனர்களாய் நடந்துகொள்வதால் சமுதாயத்துக்கு வேதாந்திகள் பயன்படாது போய்விடுகிருர்களா, என்னும் கேள்வி பிறக்கிறது. இல்லை, சமுதாய சீர்திருத்தக்காரர்களை விட வேதாந்திகளே சமுதாயத்துக்கு நன்கு பயன்படுகின்றனர். சீர்திருத்தம் என்கிற எண்ணத்தைச் சிறிதேனும் தங்கள் உள்ளத்தில் வரவழைத்துக்கொள்ளாது அரும்பெரும் சீர்திருத்தங்களை அப்பெருமக்கள் உலகில் தற்செயலாய் நிகழும்படிசெய்து வைத்துவிடுகின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அதற்கு நல்ல எடுத்துக்காட்டுஆவார். உலகில் ஒரு கேட்டையும் அவர் காணவில்லை. கேடு எதையும் உலகில் காணுது இருந்ததின் வாயிலாக எத்தனையெத்தனையோ நலன்களை உலகினுள் அவர் வழங்குவாராயினர்.

சமுதாய சீர்திருத்தக்காரர் பலபேர் சுவாமி விவேகானந்தர் காலத்தில் இந்தியாவில் ஆங்காங்குத் தென்பட்டனர். சீர்திருத்தச் சங்கங்கள் பலவற்றை அவர்கள் நிறுவியிருந்தனர். என்னென்ன சீர்திருத்தங்கள் நம் சமுதாயத்துக்குத் தேவையென்பதை மக்களுக்கிடையில் புகட்டுதற்காக அவர்கள் பத்திரிகைகள் நடாத்திவந்தனர். பிரச்சாரங்கள் மிகச்செய்தனர். சீர்திருத்தங்களுக்குத் தேவையான கிளாச்சிகளையும் அவர்கள் உண்டுபண்ணி வந்தனர். தங்கள் சங்கங்களில் சேர்ந்துகொள்ளும்படி சுவாமி விவேகானந்தரையும் அவர்கள் தூண்டினர். அத்தகையவர்களுக்குத் தக்க முறையில் சுவாமிவிவேகானந்தர் விடை கொடுத்தார்: "சமூகசீர்திருத்தக்காரர்களுக்கு நான் சொல்லுதற்கு ஒன்றுஉண்டு. நானும் ஒரு சீர்திருத்தக்காரனே. அவர்களையெல்லாம்விட நான் மிகப்பெரிய சீர்திருத்தக்காரன். ஆங்காங்கு சிறிய பகுதிகளைத் திருத்தி யமைக்க அவர்கள் விரும்புகின்றனர். நானே சமுதாயத்தின் சொரூபம் முழுதையும் திருத்தியமைக்க விரும்புகிறேன். அப்படித் திருத்தியமைப்பதற்கு அவர்கள்கையாளுகிற முறை வேறு தாக்குதல் மூலமாகவும், தகர்த்தெறிவதன் மூலமாகவும் சீர்திருத்தம் பண்ண அவர்கள் முயலுகின்றனர். ஆனல் நானே ஆக்கத் துறையில் உழைக்க முயலுகிறேன். சீர்திருததம் என்னும் முறையை நான் கையாளுவதில்லை. அதில் எனக்கு நமபிக்கையுமில்லை. மனிதன் வளர்ந்து மேல்நிலைக்கு வரவேண்டும் என்பதில் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன். சர்வேசுவரனுடைய ஸ்தானத்தில் என்னை வைத்துக்கொண்டு உலக மக்களைப் பார்த்து 'இம்முறையில் நீங்கள் நடந்துகொள்ளுங்கள்; அம்முறையில் நடந்துகொள்ள வேண்டாம்' என்று ஆக்ஞாபிக்க நான் துணிந்து முன்வரமாட்டேன். என்னல் இயலுகிற பணிவிடையை பணிவுடன் செய்ய நான் ஆயத்தமாயிருக்கிறேன். நமது சமுதாயம் என்னும் விசுவகாமா எத்தனையோ யுகங்களில் நன்கு வினையாற்றி வந்திருக்கிறது. நமது சமுதாயத்தின் ஜீவிதம் ஜீவநதி போன்று நம்கண்ணெதிரே ஓடிக்கொண்டிருப்பதைப் பார்க்கிருேம். இப்பழைய சமுதாயத்துக்கு எது நல்லது; அது எப்படிஎப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று ஆணையிடத் துணிந்து முன்வருபவன்யார்? ஆயிரக்கணக்கான சூழ்நிலைகளுக்கிடையில் நமது சமுதாயம் தன்போக்கில் வாழ்ந்து வளர்ந்து வந்திருக்கிறது. சில வேளைகளில் அது செயலற்றுத்

(5-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலே ஒரு பஸ் ஸ்டாண்டில் சுமார் ஒரு மணி நேரமாகச் சிலர் பஸ்ஸுக்காகக் காத்திருந்தனராம்; பஸ் வருவதற்கான அறிகுறிகூட இல்லை. விசாக் பெருநாள் முடிந்தபின் பஸ் சிப்பந்திகள் களைத்து அவர்களில் பலர் வேலைக்கு வரவில்லை என்று தெரிகிறது.

அந்த வழியே தம் காரில் வந்த ஓர் ஐரோப்பியர், ஸ்டாண்டில் காரை நிறுத்தி "எங்கு போகிறீர்கள், நான் உதவலாமா?" என்று கேட்டு அங்கு பஸ்ஸுக்காகத் தவங்கிடந்தவர்களில் நான்கு பேர்களைத் தம் காரில் ஏற்றிச் சென்ருராம்.

அதே வழியிலே இலங்கையர்களில் பலர் பல கார்களில் சென்றனரென்றாலும் ஒருவராவது காரை நிறுத்தி இவ்விதம் உதவ முன்வரவில்லை என்றும் காரில் அதிக இடமிருந்தும் அவர்களில் யாரும் பிறருக்கு உதவநினைக்காதது மிக ஏமாற்றமாக இருந்ததென்றும் கூறுகிருர் ஓர் அன்பர்.

பொதுவாக வெள்ளைக்காரர்களிடமிருந்து நாம் சில நல்ல விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. ஆனல் அவர்களது சில கூடாதபழக்க வழக்கங்கள் தாம் நம்மில் பலருக்கும் சுலபமாக ஏற்பட்டு விடுகிறது! சும்மா செல்லும் கார்களில் பஸ்ஸுக்காக் காத்துக்கிடக்கும் மக்களில் ஒரு சிலரை ஏற்றிச் செல்லுவதில் என்ன நஷ்டம்? அப்படி ஏற்றிச்செல்லுவதால் எவ்வளவோ பேருக்கு மிக உபகாரமாக இருக்கும். அதிகப்படி செலவில்லாமல் பிறருக்கு உதவி செய்ய பல சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துபவர்களின் வாழ்க்கை அதிக இன்பமாகவும் நிம்மதியாகவும் இருக்குமென்பது உறுதி.

* * *

அடுத்தமாத ஆரம்பத்தில் திருஞானசம்பந்த மூர்த்திநாயனரின் குருபூசை வருகிறது. திருநாவுக்கரசரின் குருபூசையில் உழவாரப்பணி செய்தது போல், சம்பந்தர் குருபூசையில் என்ன சமூக சேவை செய்யலாமென்று ஓரன்பர் கேட்கின்ருர்.

ஞான சம்பந்தருக்கு ஞானப்பால் கிடைத்ததல்லவா? அந்தத் திருவிழா சீர்காழியிலே மிக விசேஷமாக நடப்பதாயும், ஒவ்வொருவரும் பாத்திரங்களிலே கோவிலுக்குப் பால் கொணர்ந்து, அன்று அம்மையப்பர் எழுந்தருளி சம்பந்தருக்கு ஞானப்பால் வழங்கிய பின் தாங்கள் கொண்டுசென்ற பாலை, அங்கு கூடியுள்ளவர்களுக்கெல்லாம் வழங்கி தாங்களும் அருந்துவதாயும் இங்கு வந்திருந்த பாஸ்கரத்தொண்டைமான் தெரிவித்தார்.

இக்காலத்தில் குழந்தைகளுக்கு இலவசமாகப் பால் விநியோகம் செய்யவேண்டிய அவசியத்தை அரசாங்கமும் உணர்ந்துள்ளது. ஆனல் பால் அருந்தக்கூடிய அதிர்ஷ்டம் ஒரு சில குழந்தைகளுக்கே கிடைக்கின்றது. கண்ணனைகூட பால், வெண்ணெய் முதலியவற்றை எடுத்து, பல குழந்தைகளுக்கும் விநியோகித்ததாக பாகவதம் கூறும். எதிர்காலப் பிரஜைகளான குழந்தைகளுக்குப் பால் தாராளமாகக் கொடுக்கவேண்டிய அவசியத்தை விளக்கத் தேவையில்லை. ஞான சம்பந்தர் குருபூசையன்று கோவிலில் குழநதைகளுக்கு இலவசமாகப் பால் விநியோகிக்க ஏற்பாடு செய்தால் அது நல்லசமூக சேவையாக இருக்கும்.

மதுரை கோவிலிலே தினசரி அதிகாலை சம்பந்தர் சந்நிதியில் விநியோகிக்கும் "ஓர் உத்தரணி ஞானப் பாலுக்காக" நூற்றுக்கணக்கானவர் காத்துக்கிடப்பதைக் கண்டிருக்கிறேன். சில கோவில்களில்

(5-ம் பக்கம் பார்க்க)

# கிராமசபைகள் மாநாட்டில் மந்திரி கலந்து கொள்ளவில்லை

## உதவி மந்திரி கண்டனம்

கொழும்பு, செவ்வாய்

கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை கிராம சபைகள் மகாநாட்டில் வழக்கத்துக்கு மாறான இரு சம்பவங்கள் இடம் பெற்றன.

இந்த மகா நாட்டில் ஸ்தல ஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநாமசமரவீரா கலந்து கொள்ளாததும் அவர் கலந்து கொள்ளாததும் குறித்து மகா நாட்டுக்குத் தலைமைவகித்த உதவி உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. எஸ். குணசேகரா கடுமையான கண்டனம் தெரிவித்ததும் வழமைக்கு மாறான இரு நிகழ்ச்சிகள் சென்ற வார இறுதியில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் பிரதமர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

திரு. குணசேகரா ஸ்தல ஸ்தாபன வீடமைப்பு மந்திரி பற்றித் தெரிவித்த கண்டனத்தில் கிராமப் புறப்பகுதிகள் முன்னேறும் வகையில் மந்திரி எந்தவிதமான சேவையும் செய்யவில்லை எனத் தெரிவித்தார்.

இந்த மகா நாட்டில் கலந்து கொள்ளுமாறு மந்திரிக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பர்மிங்ஹாமில் அமைதி

அலபாமா, மே 14

அலபாமாவிலுள்ள பர்மிங்ஹாம் நகரில் இப்பொழுது அமைதி நிலவுகிறதென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பார்மிங்ஹாம் நகருக்கு பெடறல் துருப்புக்களை அமெரிக்க ஜனாதிபதி கென்னடி அனுப்பி வைத்துள்ளார். ராஜ்யத்தின் உள்விவகாரங்களில் தலையிடுவதாக இந்த நடவடிக்கையை அலபாமா கவர்னர் ஆட்சேபித்திருக்கிறார். கவர்னரின் ஆட்சேபனை சம்பந்தமாக அமெரிக்க ஜனாதிபதி கென்னடி, அலபாமா கவர்னருக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளார். "ராஜ்ய அதிகாரங்கள் தமக்கு அளிக்கப்பட்டிருக்கின்றதென்றும் பிரஜைகளுக்குப் பூரண பாதுகாப்பளிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்க காங்கிரஸ் தமக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறது" என்றும் அமெரிக்க ஜனாதிபதி கென்னடி தமது தந்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பர்மிங்ஹாமில் அமைதியை நிலைநாட்டும்பொருட்டு பெடரல் துருப்புக்கள் நகரின் முக்கியபகுதிகளிலெல்லாம் காவல் புரிகின்றனர். பர்மிங்ஹாமில் அசம்பாவித சம்பவங்கள் ஒன்றும் நிகழாதிருக்கும்பொருட்டு அலபாமாவுக்கு மூவாயிரம் துருப்புக்கள் வந்திருக்கின்றனர்.

# பல்கலைக்கழக புகுமுக பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

1962-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சையில் கலைப்பகுதியில் வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்கள் வருமாறு:

**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி:** செல்வி. பி. ஆறுமுகம், செல்வி வி. வி. மகாதேவா, செல்வி எஸ். பரமகுரு.

**ஹார்ட்லி கல்லூரிபரித்தித்துறை:** ஈ. டி. ஆனந்தராஜா, எஸ். அருட்பிரகாசம், பி. கிறிஸ்தோப்பர்.

**திருக்குடும்பகன்யாஸ்திரி மடப் பாடசாலை (கான்வென்ட்) யாழ்ப்பாணம்**

செல்வி எம். டி. பெனடிக்ற் செல்வி எல் ஐ. பேர்டினண்ட், செல்வி பி. ராசையா.

**இளவாலை கான்வென்ட் ஆங்கில பாடசாலை:** செல்வி எம். சுவாம்பிள்ளை.

**யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி:** பி. அருந்தவநாதன், எஸ். ஜெயராஜா.

**யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரி** சி. பாக்கியராஜா, ஆர். சிவராஜா.

**யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி:** செல்வி பி. ஆறுமுகம்.செல்வி பி. நவசிவாயம்பிள்ளை, செல்வி பி, பொன்னுத்துரை, செல்வி கே. சரவணமுத்து

**மகாஜனக் கல்லூரி தெல்லிப்பளை:** செல்வி வி. ரத்தினம், எஸ் சந்திரசேகரம், செல்வி பி. சுப்பிரமணியம், செல்வி எம். தில்லையம்பலம்.

**மெதடிஸ்ட் மகளிர் உயர்தர பாடசாலை, பருத்தித்துறை:** செல்வி சி. ராஜரத்தினம், செல்வி. எஸ். தாமோதரம்பிள்ளை, செல்வி எஸ். தம்பிங்கம்.

**நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், கரவெட்டி:** எபி. கனகநாயகம், செல்வி பி. சிதம்பரம்பிள்ளை, வி. தங்கேஸ்வரராஜா.

**இராமநாதன் கல்லூரி, சுன்னகம்:** செல்வி எஸ். பாலாம்பிகை செல்வி, எஸ். கலாவதி, செல்வி எஸ். நாகபூஷணியம்மாள், செல்வி வி. ராதா, செல்வி வி. ருக்மணி, செல்வி என். சிவசக்தி செல்வி. கே. வேதநாயகி.

**ஸ்கந்தவரோதயா கல்லூரி சுன்னகம:** கே. கணேஷலிங்கம், ஏ. கமலநாதன்., கே. கனகரத்தினம்.

**ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரி, புத்தூர்:** கே. பாலசுப்ரமணியம், ஏ. ராஜேந்திரம்.

**யூனியன்கல்லூரிதெல்லிப்பளை** எஸ். சிவநாதன்.

**வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, சித்தங்கேணி:** கே. மாசிலாமணி, கே. பொன்னையா.

**வைத்தீஸ்வர வித்தியாலயம் யாழ்ப்பாணம்:** ஏ. கைலாயபிள்ளை, எஸ். குலசிங்கம

**வேலணை மத்திய மகா வித்தியாலயம:** எஸ். பாலச்சந்திரன்.

**வேம்படிமகளிர் உயர்தர பாடசாலை:** செல்வி ஆர். கார்த்திகேசு செல்வி ஏ. திருநாவுக்கரசு.

**சிவாநந்த வித்தியாலயம் மட்டக்களப்பு:** எஸ். ஈ எதிர்மன்னசிங்கம்.

தனிப்பட்ட முறையில் (யாழ்ப்பாணம்) செல்வி பி. ரோஜதி, செல்வி எஸ். சந்திரஜோதிதேவி,

# திருடரைத் தடுக்க தொண்டர் சபை

தொல்புரம், செவ்வாய்

"நாட்டில் திருடர் தொல்லை மலிந்துள்ள தறுவாயில் இதனைத் தீர்க்க வாலிபர்கள் ஒன்று கூடி கிராம தொண்டர் இயக்கத்தில் சேர்ந்து நாட்டுக்குப் பணிபுரியவேண்டும்" என்று தொல்புரம் கிராம முன்னேற்றச்சங்க விசேஷ பொதுக் கூட்டத்திற்கு திரு. அ. தையல்பாகர் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

திரு. சி. பரமலிங்கம் தலைவராகவும், திரு. சி. சோமசுந்தரம் காரியதரிசியாகவும், திரு. த. பரமேஸ்வரன் தனதிகாரியாகவும் தொண்டர்களாக 76 பேர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். சங்கானை பொலிஸ் நிலைய அதிபர் திரு. என். டபிள்யு எகநாயக்கா 'ஊர் காவலும் தொண்டர் படையினரும்' பற்றிப் பேசினர்.

சமாதானமன்ற உத்தியோகத்தர்களாகத் திருவாளர்கள்: சி. சோமசுந்தரம், அ. தையல்பாகர் ஜே. பி., சி. பரமலிங்கம், கு. கணபதிப்பிள்ளை, ஆ. சி. நவரத்தினம், ந. மகாதேவன், சி. யோ. கந்தையா, நா. கிருஷ்ணசாமி, வே. ஆறுமுகம், மா. கனகசுந்தரம், செ. கந்தையா ஆகியோர்ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

—

# "இலங்கையும் ஜனநாயகமும்"

மக்கோன, செவ்வாய்

ஆசியாவில் இலங்கையில் மட்டுமே ஜனநாயகம் நிலைத்து நிற்கிறது. இங்குள்ள ஜனநாயகம், அரசாங்க அடிப்படையில் தோன்றியதல்ல; புத்த தர்மத்தின் அடிப்படையில் தோன்றியது என்று ராஜ மகா விகாரையில் நடந்த கூட்டத்தில் தம்பதேனியா எம். பி. திரு. ஆர். ஜி. சேனநாயக்கா பேசும்போது கூறினர்.

இவ்விகாரையில் உள்ள புதிய போதனை மண்டபத்தை தம்பதேனியா எம். பி. திரு. சேனநாயக்கா, கோட்டே எம். பி. திரு. ஸ்ரான்லி திலகரத்ன, கொழும்பு, வடக்கு எம. பி. திரு. சுகததாசா ஆகியோர் திறந்து வைத்தார்கள்.

திரு. சேனநாயக்கா தொடர்ந்து பேசியபோது கூறியதாவது: புத்த பகவானின் போதனைகளிருந்தே உண்மையான ஜனநாயகம் உதயமாகியது. புத்த சமயத்தை முழு மனதுடன் ஏற்பவர்கள், ஜனநாயகத்தின் கொள்கைகளையும் ஏற்கவேண்டும்.

—

# 'சுதந்திரக்கட்சியில் மக்களுக்கு நம்பிக்கையில்லை'

**— என். எம்.**

ரங்காலை, செவவாய்

'ஏகாதிபத்திய அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள கட்சிகள் தமது முடிவுகாலம் விரைவில் வரப்போகிறதெனப் பயந்து ஐக்கிய இடதுசாரி முன்னணியை தகர்க்க பலவித முயற்சிகள் செய்கின்றனர்.

இவ்வாறு எட்டியாந்தோட்டை எம். பி. டாக்டர் என். எம். பெரேரா இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

—

# விபத்தில் மரணமானவர்

யாழ்ப்பாணம், புதன்

பருத்தித்துறை வியாபாரி மூலையைச் சேர்ந்த சதாசிவம் மகாலிங்கம் என்பவர் பஸ்ஸினல் மோதுண்டு மரணமானர். இவரது சடலத்தை காலஞ்சென்றவரின் மகன் கந்தசாமியும், உறவினர்களும் வியாபாரிமூலை மயானத்தில் தகனஞ் செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

# "நாடகங்கள் மூலம் சமூக சீர்திருத்தம்"

## கலாநிதி சதாசிவம் விளக்கம்

மாவிட்டபுரம், செவ்வாய்

"பண்டைத் தமிழர் இயல் இசை நாடக மெனத் தமிழை வகுத்தனர். செந்தமிழ் வழக்கும் கற்பனை அலங்காரங்களும் கூடிய இயற்றமிழ் இலக்கியங்களைப் படித்து ரசிப்பது எல்லோருக்கும் முடியாது. எனவே கல்வி அறிவு இல்லாத மக்களும் பயன் பெறும் பொருட்டு நாடகங்களை உருவாக்கினர். கல்வி அறிவும் நுண்மதியும் உடையோரே இயற்றமிழ் இலக்கியங்களில் புலவன் கூறும் பொருளையும் அவன் நோக்கத்தையும் வேறுபடுத்தி உணரும் ஆற்றல் பெற்றவர்கள் நாடகத்தமிழ் கண்வழியாகவும் செவிவழியாகவும உணரப்படுவது. இந்த உணர்ச்சி பெறுவதற்கு நிரம்பிய கல்வி அறிவு தேவையில்லை. எனவே பொது மக்களை நல்வழிப்படுத்தி அவர்கள் மூலம் நாட்டின் சீர்திருத்தத்தைக் கொண்டுவர முயல்வோர் பல நாடக விழாக்களை நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தவேண்டும்."

அராலி வாணிவிலாச சபை பொன்விழாவின் நாடக விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய கலாநிதி ஆ. சதாசிவம் மேற்கண்டவாறு கூறினர். அவர் தொடர்ந்து பேசுகையில கூறியதாவது:

இன்று ஈழத்தில் தமிழர் பண்பாட்டுக்குப் புத்துணர்ச்சி கொடுத்து வளர்க்க வேண்டும் என்ற அவாவினல் பலர் நாடகங்களை எழுதியும், நடித்தும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

சமூக நாடகங்களின் அத்தியாவசியம் என்ன என்ற கேள்வி சிலரிடையே எழலாம். நாம் தினமும் பல தவறுகளைச் செய்துகொண்டேயிருக்கிறோம். இவற்றை எமது அருகாமையில் இருப்பவர் சுட்டிக்காட்டும் போது நாம் அவர் மீது சினந்து விடுகிறோம். ஆனல் நாடக ஆசிரியர் எமது பெயரைச் சுட்டாது இன்னொரு பெயரில் கதாபாத்திரம் புனைந்து எமக்கு முன்னே நாடக வழியாகக் காட்டும் போது நாம் பட்சபாதமற்ற முறையில் எமது தவறை உணர்கிறோம். எனவே எமது குறைகளை இன்னொருவரின் பெயரில் போட்டு எம் எல்லோரையும் நல்வழிப் படுத்த முயல்வது சமூக சீர்திருத்த நாடகமாகும். ஆனல்இன்றைய சமூக சீர்திருத்த நாடகங்கள் சில சினிமாவைப் போன்று மக்களை பிழையான பாதையில் நடத்தவும் முற்படுகின்றன.

நாடக இலக்கியங்கள் கிராம மக்களுக்கு விளங்கக்கூடியதாக அவர்கள் மொழி நடைமுறையில் ஆக்கப்படலால், படித்து உணருவதற்கு என்று எழுதப்படும் நாடக இலக்கியங்களுள் கதாபாத்திரங்களின் சம்பாஷணைகள் கதாபாத்திரங்களின் பண்பாட்டிற்கு ஏற்ற இயற்கையான பேச்சு மொழியைக் கொண்டிருக்க நாடக ஆசிரியனின் மொழிநடை இலக்கண ரீதியாக அமைந்திருக்க வேண்டும். வடமொழியில் சகுந்தலை நாடகத்தை எழுதிய காளிதாசரும் கிராமியச் சொற்களையும் வாழக்கையும் பண்பாடற்ற மக்களின் வாயில் நுழைத்திருக்கிறர். ஆனல் தமது நாடகத்தை சிறந்த வடமொழி நடையில் எழுதியிருக்கிறர். இவ்வேறுபாட்டை எமது ஈழத்து நாடக ஆசிரியர்கள் உணர்ந்துகொள்ள வேண்டியது மிக அவசியம். நாட்டின் பேச்சு வழக்கை பாதுகாத்து காலத்திற்குக் காலம் ஏற்படும் மொழி மாற்றத்தை காண விரும்புவோர் நாடக இலக்கியங்களை எழுதுவதில் ஆர்வம் காட்டி அந் நாடக கதாபாத்திரங்கள் வாயிலாகப் பேச்சுத் தமிழை பாதுகாக்கலாம். இதனை விடுத்து இயற்றமிழ் இலக்கியங்களின் மூலம் பேச்சுத் தமிழை பாதுகாக்க முற்படுவோர் 'குளிக்கப்போய் சேற்றைப் பூசிக் கொள்வதுபோல்' நடந்து கொள்கிறர்கள்.

ந. சுந்தரம்பிள்ளை எழுதிய "வெட்கமில்லை" என்ற நாடகமும் சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றன.

# கைத்தொழில் வளவு

கொழும்பு, செவ்வாய்

ஜா—எலையில் உள்ள கைத்தொழில் வளவு அடுத்த திங்கட்கிழமை சம்பிரதாயப்படி திறந்துவைக்கப்படும்.

—

# ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அபிஷேகம் செய்யும் பாலை சுத்தமாகப் பிடித்து அன்றூடம் குழந்தைகளுக்கு இலவசமாக விநியோகிப்பதாகவும் கேள்விப்பட்டேன். சம்பந்தர் விழாவில் இலவசமாக ஞானப்பால் விநியோகம் நடைபெறுமென்றல் ஊரிலுள்ள எல்லாக் குழந்தைகளும் அன்று கோவிலுக்கு வந்து விடுவரல்லவா! சமூகத்துக்கு உதவியாக, சமயமும் கோவிலும் இருக்க வேண்டும். அதுதான் சமய வளர்ச்சிக்கும் கோவில் முன்னேற்றத்திற்கும் வழி செய்யும்.

* * *

அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன் தன்னை அமரர்கள் தம்பெருமானை அரனை மூவா, மருந்தமரர்க் கருள்புரிந்த மைந்தன் தன்னை மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும், திருந்தொளிய. தாரகையுந் திசைகளெட்டுந் திரிசுடர்கள் ஓரிரண்டும் பிறவுமாய, பெருந்தகையைப் பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

—திருநாவுக்கரசர்

# வீடு தீக்கிரை

காரைநகர், செவ்வாய்

காரைநகர் ஆலடியிலுள்ள ஒருவரின் வீடு தீப்பிடித்து எரிந்தது. இனந்தெரியாத சில பேர்வழிகள் பட்டாசு வெடிகள் கொளுத்தியதனல் இத் தீவிபத்து ஏற்பட்டதாகத் தெரிகிறது.

—

# விவேகானந்தரின்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தூங்கிக்கொண்டிருப்பது போன்று தென்படுகிறது; வெறு சில வேலைகளில் ஆர்வத்தோடு பல அலுவல்களில் அது ஈடுபடுகிறது. அதன் போக்கு எப்படியிருக்க வேண்டுமென்று கட்டளையிடத் துணிபவன் யார்? அதற்குப் பணிவிடை செய்வது நமக்குக் கிடைத்துள்ள வாய்ப்பு செடிக்கு எருவிட்டு, நீர்பாய்ச்சுவது போன்று இப்பொழுது நம் சமுதாயத்துக்குத் தேவையாயிருப்பவைகளை எடுத்து வழங்குவது நம்கடன். அதன் போக்கை மாற்றியமைக்க நமக்கு இயலாது. அதனிடத்துத் தீமைகள்பல இப்பொழுது மலிந்துகிடக்கலாம். ஆனல் அவையாவையும் களைந்துவிட்டுமேல் நிலைக்கு வரும் உள்வலிவு நம் சமுதாயத்தில் இருக்கிறது. அதன் கதி என்னகுமோ என்று அதைக் குறித்து நம்மில் யாருமே வருந்தவேண்டிய அவசியமில்லை."

(நாளை முடியும்)

# 16 நாடுகளின் 40 படங்கள் கேன்ஸ் விழாவில் இடம் பெறும்

இம்மாதம் நடைபெறவிருக்கும் கேன்படவிழவில் பதினறு நாடுகளிலிருந்துவரும் சுமார் 40 படங்கள் திரையிடப்படும்.

இத்தாலியப்படங்களில் மிகச் சிறந்த 'வேங்கை' என்னும் படம் ஆவலோடு எதிர்பார்க்கப்படுகிறது. இப் படம் நாலரைக் கோடி ரூபா செலவில் விஸ்கோந்தியால் தயாரிக்கப்பட்டது. இது இத்தாலிய விடுதலை வீரர் கரிபால்டியின் வாழ்க்கையைப்பற்றிய படம்.

ஹிட்ச்காக்கின் புதிய படமான 'பறவைகள்' திரையீட்டுடன் மே 9-ம் திகதி விழா தொடங்குகிறது.

சீனுவின் 'பேய்த்தனமான அரசி', கியூபாவின் 'மற்றெரு கிரிஸ்டேபல்', பிரான்ஸின் 'ஹிட்லரா? அவனைப் பற்றிக் கேள்விப்பட்டதேயில்லையே', பிரிட்டனின் 'விளையாட்டு வாழ்க்கை', அமெரிக்காவின் 'அழகு காட்டும் பறவையைக் கொல்ல', ஜப்பானின் 'ஹராகிரி', ஜெர்மனியின் 'கிரீஸ்', போலந்தின் 'நேசிக்கச்செய்யும் கலை' ஆகிய குறிப்பிடத்தக்க படங்கள் விழாவில் காட்டப்பெறும்.

ஜெர்மனி, ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளைச்சேர்ந்த நடிகர்கள், விமர்சகர்கள், எழுத்தாளர்கள் ஆகியோர் அடங்கிய 12 பேர் கொண்ட நடுவர்களால் விழாவில் கலந்துகொள்ளும் பரிசுபெறும் படம் தெரிந்தெடுக்கப்படும். இந் நடுவர்களில் ஒருவராக சத்யஜித்ரே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# டெலிவிஷன் - சினிமா போட்டி

மேனுட்டு சினிமா படத் தயாரிப்பாளர்கள் டெலிவிஷன் போட்டியைச் சமாளிக்க கோடி கோடியாகப் பணத்தைக் கொட்டிக் கொண்டிருக்கிருர்கள்.

"பீகிங்கில் ஐம்பத்தைந்து நாட்கள்" என்ற படத்தை ஸ்பெயினில் தாயாரித்தார்கள், சீனவில் அந்நிய நாட்டினருக்கு எதிராக 1900-ம் ஆண்டில் நடைபெற்ற "பாக்சர் எழுச்சியை" அடிப்படையாகக் கொண்ட அந்தக் கதைக்காக 1900-ம் ஆண்டில் இருந்த பீகிங் நகரையே ஸ்பெயினில் தத்ரூபமாக நிர்மாணித்தார்.

"நெடுங் கப்பல்கள்" என்ற கதைக்காக ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த பண்டைய வைக்கிங்குகளின் நகரையே உயிர்களை சொட்டும்படி யுகோஸ்லாவியாவில் உண்டாக்கினுர்கள். அந்நகரை மரத்தாலான வீடுகள் அலங்கரித்தன.

லண்டனுக்கு அருகிலுள்ள ஷெப்பர்ட்டன் என்னுமிடத்தில் திறந்த வெளியில் இரண்டாம் உலகப் போரின்போது இருந்த லண்டனின் ஒரு பகுதியை அப்படியே கட்டினுர்கள். இந்தப் பகுதி யுத்தகாலத்தில் ஜெர்மன் விமானங்களின் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகித் தகர்ந்தது. படப்பிடிப்பின்போது நிர்மாணித்த "செட்" குண்டுவீச்சுக்கு உள்ளாகி இடிந்து நொறுக்கப்பட்டது. எரிந்து சாம்பலாக்கப்பட்டது. நடந்துபோன நாசச் செயல்களை உயிர்த்துடிப்புடன் எடுத்துக் காட்டக் கோடிக்கணக்கில் பணத்தை அங்கே கொட்டினுர்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னுல் பேசும் படங்களில் அரும்பெரும் காட்சிகள் நிறைந்தன. பிரமாண்டமான நிர்மாணங்கள் செய்யப்பட்டு படம் பிடிக்கப்பட்டது. பின்னர் சினிமா பல கோடிப்பேர் பார்த்து மகிழும் நிலையை அடைந்தவுடன் அரும்பெரும் காட்சிகளான "ஸ்பெக்டாகுலர்" படங்களின் எண்ணிக்கை பெருகி வந்தது. தற்போது டெலிவிஷன் மீண்டும் சினிமாவை பிரமாண்டமான தயாரிப்புகளில் ஈடுபடவைத்து விட்டது.

# பூட்டுக்காரராக எம். ஜி. ஆர்.

ஹரிஹரன் பிலிம்ஸ் 'ஆனந்த ஜோதி'யில் வில்லனைக்கண்டு பிடிக்க பூட்டுக்காரராக மாறிஞர் எம். ஜி. ராமச்சந்திரன். பலவிதமான பூட்டுகள் பற்றிய கண்ணதாசனது கருத்து மிக்க பாட்டு ஒன்றைப் பாடியவாறு தெருவழியே பூட்டுக்காரன் உடையில் சென்று வில்லன் வீட்டைக் கண்டுபிடித்து விடுகிருர்.

இக் காட்சியை படமாக்க அருணுசலம் ஸ்டூடியோவில் தத்ரூபமாக பல வீடுகள், கடைகளுடன் ஒரு தெருவையே சிருஷ்டித்தார்கள். நூற்றுக்கணக்கான ஆண்-பெண் துணை நடிகர்கள் கலந்துகொண்ட இக்காட்சிகள் தொடர்ந்து பலநாட்கள்படமாக்கப்பட்டன.

# விஜயகுமாரியின் பிரார்த்தனை

மன்னனின் தங்கை அவள். நாட்டுக்கு ஆபத்து என்ற நிலையில் ஓடினுள் தங்கள் குலதெய்வத்தின் ஆலயத்திற்கு. "உயிரைத் தருகிறேன் ஊரைக் காப்பாய் தாயே" என்று கதறினுள்.

சுசீலா பாடிய இந்த பாட்டுக்கான காட்சி மெஜஸ்டிக் ஸ்டூடியோவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆலயத்தில் அண்மையில் படமாக்கப்பட்டது. மன்னனின் தங்கையாக விஜயகுமாரி அக்காட்சியில் நடித்தார்.

எம். ஜி. ராமச்சந்திரன், பானுமதி, எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா, என். எஸ். கே. மதுரம் ஆகியோர் நடித்து வரும் படம் இது.

## பரத நாட்டிய அரங்கேற்றம்

குமாயரி கீதாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் சமீபத்தில் சென்னையில் நடைபெற்றது. டாக்டர் வி. என். சர்மாவின் புத்திரியான இவர் பரத சாஸ்திர ரத்ன ஜி. எல்லப்ப முதலியாரிடம் பரதம் பயின்றவர். அரங்கேற்றத்திற்குப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி தலைமைவகித்து குமாரி கீதாவையும், அவரைப் பயிற்றுவித்த நட்டுவனரையும் பாராட்டிப் பேசினுர்.

## ஊமைப் பட கதாநாயகி தயாரிக்கும் படம்

ஊமைப்படக் காலத்தில் ரசிகர்களின் மனதைக் கவர்ந்த கோஹர் பாய்,சாந்துலால் ஷா இருவரும் சேர்ந்து தயாரித்து வரும் 'அகேலிமத் ஜையோ' (தனியாகச் செல்லாதே) என்னும் படம் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது.

ராஜேந்திர குமாரும், மீனுகுமாரியும் இப் படத்தில் நடிக்கின்றனர். இப் படத்தை சாந்துலால்ஷாவே டைரக்ட் செய்கிருர்.

## 'இரத்ததிலக'த்தில் மாலாவின் நடனம்

நேஷனல்மூவீஸின் தயாரிப்பான 'இரத்த திலக'த்தில் சென்னை சகோதரிகளில் மூன்ருமவரான குமாரி மாலாவின் நடனங்களைச் சேர்த்திருக்கிருர்கள். சீன வீரர்கள் மத்தியில் குமாரி மாலா ஆடுவதான நடனம் ஒன்றை சமீபத்தில் கோல்டன் ஸ்டுடியோவில் படமாக்கினுர்கள்.

---

## இந்தியாவில் ஹாலிவுட் தயாரிப்பாளர் வைஸ்

பிரபல ஹாலிவுட் தயாரிப்பாளர் ராபர்ட் வைஸ் தமது மனைவியுடன் இந்தவாரம் இந்தியாவுக்கு வந்திருக்கிருர் காஷ்மீர், சென்னை, கல்கத்தா ஆகிய இடங்களுக்கும் அவர் செல்வார். இவர் ஆரம்பத்தில் படத் தொகுப்பாளராகப் பட உலகில் நுழைந்து, பிரபல தயாரிப்பாளராக மாறினுர். உள்ளத்தை உருக்கிவிடக் கூடியதும், ஒரு நிரபராதி தூக்குமேடை ஏறுவதையும் கொண்ட விறுவிறுப்பான "நான் வாழ விரும்புகிறேன்" என்ற படத்தை தயாரித்தவர் வைஸ். இப்படத்தில் நடித்த சூசன் ஹேவேர்டுக்கு அகாடமிப் பரிசு கிடைத்தது.

இவர் அண்மையில் பிரபலமான பேய்க் கதையான 'பேய் நடமாட்டம்' என்னும் படத்தை தயாரித்து வெளியிட்டிருக்கிருர்.

# கலை அரங்கம்



'பணம்பந்தியிலே' என்ற படத்தில் எஸ். எஸ். ராஜேந்திரனும், விஜயகுமாரியும் தோன்றும் ஒரு சுவையான கட்டம். இப்படம் விரைவில் சினிமாஸ் திரைகளுக்கு வரவிருக்கிறது.

# சிற்பியின் வாழ்க்கை படமாகிறது

ஒய்சாலப் பாணியைச் சேர்ந்த மாபெரும் சிற்பியான ஜக்கண்ணுச்சாரியின் வாழ்க்கையை ஈஸ்ட்மென் கலரில் விக்ரம் புரொடக்ஷன்சார் படமாகத் தயாரிக்கின்றனர். இது தெலுங்கு, கன்னடம் ஆகிய இரு மொழிகளில் தயாராகி வருகிறது.

பேலூர்க் கோயிலின் கும்பாபிஷேகத்தோடு காட்சி ஆரம்பமாகிறது. மக்கள், அக்கோயிலை கட்டிய மாபெரும் சிற்பி ஜக்கண்ணுவைப் புகழும் நேரத்தில் மூலவர் சிலையில் குறையுண்டென்று ஓர் இளைஞன் வாதாடுகிருன். 'குறையுண்டென்ருல் என் கரத்தைத் துண்டிக்கிறேன்' என்கிருர் ஜக்கண்ணு. இளைஞன் உளியால் மூலவரின் மூக்கைச் செதுக்க உள்ளிருந்து ஒரு தேரை விழுகிறது. சிற்பி சொன்னபடி தன் கையைத் துண்டித்துக்கொள்கிருர். அச் சிற்பி வேறு யாருமல்ல; அந்த இளைஞனின் தந்தைதான். சிற்பியும் மகனும் ஒருவரை ஒருவர் அறியாமல் இத்தனை காலமும் பிரிந்திருந்தனர். இந்த உருக்கமான காட்சி பேலூரில் படமாகியது.

பேலூர் கோயிலினைப்பற்றிய டெலிவிஷனுக்கான டாக்குமெண்டரியும் இத்துடன் தயாராகிறது.

இப்படங்களில் நாகையா சிற்பி ஜக்கண்ணுவாகவும் தெலுங்குப்படத்தில் என். டி. ராமராவ் அவருடைய மகனுகவும் கன்னடத்தில் கல்யாண் குமார் அவருடைய மகனுகவும் நடிக்கின்றனர்.

# சினிமாப் படம் பிடிக்க கிராமத்தையே கொளுத்தினர்!

ஒரு சினிமாப்படக் காட்சிக்காக ரூபா 75 ஆயிரம் செலவில் அமைக்கப்பட்ட ஒரு சிறு கிராமத்துக்கு தீயிடப்பட்டு அது சாம்பலாக்கப்பட்டது. சினிமாப் படம் பிடிக்கத்தக்க வகையில் இந்த கிராமம் நன்கு பற்றி எரிவதற்காக 3000 கெஜ நீள மின்சாரக்கம்பியும் 350 கலன் பெற்ரேலும் பயன்படுத்தப்பட்டது.

மலாயாவில் அவசர காலம் அமுலில் இருந்த போது நடந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்ட 'டிராகனின் வருடம்' என்னும் படத்தை யுனைடெட் ஆர்ட்டிஸ்ட் புரொடக்ஷன்ஸார் தயாரிக்கின்றனர்.

அவசர நிலை அமுலில் இருந்த போது கம்யூனிஸ்ட்டுகளுக்குத் தஞ்சம் அளித்த கிராம வாசிகளுக்குத் தண்டனைவிதிக்கும் வகையில் மலாயா படையினர் ஒரு கிராமத்துக்கே தீ வைத்துக் கொளுத்தினர். இந்தச் சம்பவத்தை படத்தில் புகுத்த 14 வீடுகள், வரிசையாகக் கடைகள், ஒரு பள்ளிக்கூடம் ஆகியவற்றைக்கொண்ட கிராமத்தை படத்தயாரிப்பாளர்கள் கோலாலம்பூருக்கு அருகே 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைத்தனர். பின்னர் அக்கிராமத்துக்குத் தீ வைக்கப்பட்டு அது படமாக எடுக்கப்பட்டது.

---

## வைஜயந்தியின் திட்டம்

தாகூரின் பிரபல 'சண்டாலிகா' கதையை நாட்டிய நாடகமாக வெற்றிகரமாக நடத்திய வைஜயந்திமாலா வெளிநாடுகளுக்கும் சென்று அதை நடத்திக்காட்டத் திட்டமிட்டுள்ளார்.

## அரியாலையில் கலைவிழா

யாழ்ப்பாணம், புதன்

அரியாலை சனசமூக நிலையத்தின் 14-வது ஆண்டு விழாவினை முன்னிட்டு அரியாலை சன சமூகநிலைய கலாபிவிருத்திப் பகுதியினர் கலைவிழாவும் விற்பனவுக் கண்காட்சியும் நடத்த உத்தேசித்துள்ளனர். இக் கலைவிழாவில் ஓர் அம்சமாக சிறுகதை, கலைக் கைப்பணிச் செய்கைக்குரிய போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

இலக்கிய மறுமலர்ச்சியை கருத்திற்கொண்டு இரு சிறுகதைப் போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன. யாழ்ப்பாண மாவட்ட எழுத்தாளர்களுக்கென ஒரு போட்டியும் அரியாலை சன சமூகநிலைய அங்கத்தவர்களுக்கென ஒரு போட்டியும் நடத்தப்படுகின்றன. சிறுகதைப் போட்டிகளின் முடிவுதிகதி அடுத்த மாதம் 8-ம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கலை கைப்பணியை விருத்தி செய்யும் நோக்கத்துடன் கலை கைப்பணிப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டியில் மாதர் சங்கங்கள், கலை மன்றங்கள், சனசமூக நிலையங்கள் என்பன கலந்துகொள்ளலாமெனவும் அடுத்த மாதம் 14-ம் திகதி போட்டி முடிவுதிகதி எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கான பரிசுகள் கலைவிழாவில் வழங்கப்படவிருக்கின்றன.

## மட்டக்களப்பில் கலைவிழா

மட்டக்களப்பு, செவ்.

மட்டக்களப்பு காந்தீய சேவா சங்கம் சுமார் 10 ஆயிரம் ரூபாய் செலவில் உருவாக்கியுள்ள காந்தியடிகளின் முழு உருவச் சிலையின் திறப்பு விழா வருகிற ஞாயிற்றுக்கிழமைநடைபெறவிருக்கிறது. மட்டக்களப்பு முதல் எம். பி திரு. செ. இராசதுரை உருவச்சிலையைத் திறந்து வைப்பார். பல அறிஞர்கள் கருத்துரை வழங்குவர்.

"ஆசிய ஜோதி" எனும் தலைப்பில் மட்டுநகர் இளம் எழுத்தாளர் சங்கத்தலைவர் திரு. தி. நாகராஜன் தலைமையில் நடைபெறும். 'பாமாலை' நிகழ்ச்சியில் இளம் கவிஞர்களான வி. த. குமாரசாமி, "கவியுகன்", "மருமைந்தன்", "அன்பு முகைதீன்", "முத்தழகு", "திமிலைக்கண்ணன்" ஆகியோர் கலந்து கொள்வர்.

திரு. சி. போ. மயில்வாகனம் தலைமையில் நடைபெறும் கலை விழா நிகழ்ச்சிகளில் கண்டிய நடனம், காத்தான்குடி முஸ்லிம் கலைக்குழுவினர்கள் அளிக்கும் "கோலாட்டம்" வசந்தன் கூத்து, காவடி ஆட்டம், கும்மி, இசைவிருந்து மாஸ்டர் சிவலிங்கம் குழுவினரின் "காந்திமகான் கதை" எனும் வில்லுப்பாட்டு, திரு. ஜீவம் யோசப் குழுவினரின் வாத்தியக்கச்சேரி, கலைஞர் கைலாசபிள்ளையின் மாணவிகள் நடனம், வாணவேடிக்கை, நாவலடி ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் அளிக்கும் "வள்ளி திருமணம்", தாண்டவன் வெளி பொது மக்கள் தயாரித்தளிக்கும் "குருக்கேத்திரன் போர்" எனும் நாட்டுக்கூத்து ஆகியன விசேட நிகழ்ச்சிகளாக இடம் பெறுகின்றன.

## "அபிவிருத்தி திட்டங்களை அமுல் செய்க"

— டட்லி

குளியாப்பிட்டி, செவ்வாய்

அபிவிருத்தி திட்டங்களை அமுல் செய்வதன் மூலமே வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கலாம் என்று குளியாபிட்டி பண்டார நாயக்கா பூங்காவனத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. டட்லிசேனநாயக்கா பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் நாட்டின் முன்னேற்றம் கருதி அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்யவேண்டும் என்று கூறினர்.

நாட்டின் பொருளாதார நிலை மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளது. சில வருடங்களுக்கு முன்னர் ஒரு ரூபாவுக்குக் கிடைத்த உணவுப் பொருள்கள் இப்பொழுது ஐந்து ரூபாவுக்குக் கிடைப்பதும் கஷ்டமாகவிருக்கிறது என்றும் அவர் கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: "கல்லோயா அபிவிருத்தி சபையைக் கலைக்க அரசாங்கம் முயற்சிக்கிறது. மக்களின் நலன் கருதி எத்தனையோ வேலைகள் இன்னும் செய்ய வேண்டியிருக்கிறது. இதற்கு கல்லோயா அபிவிருத்தி சபை உதவுகிறது.

அரசாங்கம் கொண்டுவரவிருக்கும் புதிய பட்ஜட் யோசனைகளை எதிர்க்கட்சி எம். பி.க்கள் மட்டுமின்றி ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அங்கத்தவர்களும் எதிர்ப்பார்கள்".

## அரசாங்க இலாகாவின் இறுதிப்போட்டி

வவுனியா, செவ்வாய்

வவுனியா நீர்ப்பாசன திணைக்கள விளையாட்டுக்கழகத்தினல் நடத்தப்படும் அரசாங்க இலாகா கைப்பந்தாட்டப் போட்டியின் இறுதி வெற்றிப் போட்டியும், பரிசளிப்பு விழாவும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. இப்போட்டி நீர்ப்பாசன இலாகா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கிறது. இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்பட்டன. முதற் பிரிவில் கிருஷிக இலாகாக கோஷ்டி அதிக புள்ளிகள் பெற்று சாம்பியனுகத் தேரிவு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது பிரிவில் கல்வி இலாகாவும் கச்சேரி தாரகைகள் கோஷ்டியும் சம புள்ளிகளைப் பெற்றுள்ளன. இவற்றுக்கிடையே நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கும் போட்டி முடிவிலிருந்து சாம்பியன் கோஷ்டி தெரிவு செய்யப்படும். சனிக்கிழமை இரு கோஷ்டிகளுக்குமிடையே போட்டி நடைபெறவிருக்கிறது.

இதுவரை நடைபெற்ற போட்டி முடிவுகள் வருமாறு:

முதல் பிரிவில் கிருஷிக இலாகா 4புள்ளிகளும், கச்சேரி 2 புள்ளிகளும், தபால் இலாகா 2 புள்ளிகளும், இரண்டாம் பிரிவில் கல்வி இலாகா 8 புள்ளிகளும், கச்சேரி தாரகைகள் 8 புள்ளிகளும், பொலிஸ் இலாகா 2 புள்ளிகளும் பெற்றுள்ளன.

## இந்தியக் கைதிகள்

புதுடில்லி, மே 14

சீனரினல் கைதுசெய்யப்பட்ட மேலும் 160 இந்திய போர்க்கைதிகள் இம்மாதம் 17-ந் திகதி விடுதலை செய்யப்படுவார்கள். இவர்களில் 19 பேர் நோய்வாய்ப்பட்டும் காயமடைந்தும் இருக்கிருர்கள்.

## பாடகர் குத்தப்பட்டார்

டோக்கியோ, மே 14

20 வயதுள்ள பிரபல ஜப்பானிய பாடகர் ஒருவர் மத்திய ஜப்பானிலுள்ள கனஸவ என்ற இடத்தில் வாளால் குத்தப்பட்டார் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

ஆயிரம் ரசிகர்கள் முன்னிலையில், மேடையில் இருக்கும் பொழுது அவர் குத்தப்பட்டார் என்றும் 30 வயதுள்ள ஒருவர் மேடைமீது ஏறி அவரைக் குத்தினர் என்றும் பொலிசார் அறிக்கையொன்று கூறுகிறது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### புதன் 15-5-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமியசிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 கே. சபாரத்தினம் — வயலின், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 விவாத மேடை, 9-45 குரல்வகை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-45 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்).

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 வஸந்தா சரவணன் — வீணை.

மாலை 5-15 டி. வி. சிவலிங்கம் — பாட்டு, 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்திஅரங்கம் (சென்னை அஞ்சல்), 7-45 மெய்காவலர் — சித்திரம், 8-00 வஸந்தா சரவணன் — வீணை, 9-15 நல்லுரை, 9-30 பொன்னெளிர் பாரதம் — இசை நிகழ்ச்சி, 9-50 இசைமாலை.



அநுராதபுரம் - மதவாச்சி

# ரயில் விபத்தில் ரூ. 10 லட்சம் நஷ்டம்!

## நூற்றுக்கணக்கான ஊழியர் பாதையை செப்பனிடுகின்றனர்

கொழும்பு, திங்கள்

அநுராதபுரம்—மதவாச்சி ரயில்பாதையில் சரக்குவண்டி தடம்புரண்டதன் விளைவாக, புகையிரதப்பகுதிக்கு சுமார் ரூ. 10 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. நூற்றுக்கணக்கான ரயில்வே ஊழியர்களும், என்ஜினியர்களும், பயிற்சிபெற்ற தொழிலாளர்களும் ஸ்தலத்தில் ஜரூராக சீர்திருத்த வேலைகளைச் செய்துவருகிறார்கள். ரயிலில் இணைக்கப்பட்டிருந்த 26 எண்ணெய் வாகன்களில், 23 வாகன்கள் தூள் தூளாக நொறுங்கி விட்டன.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையேயும், மற்றுமிடங்களுக்கும் சகஜமான ரயில் போக்குவரத்தை மீண்டும் ஏற்படுத்த, உயர்தர அதிகாரிகளும், சிரேஷ்ட என்ஜினியர்களும் இராப்பகலாக வேலை செய்து வருகின்றனர்.

## 'மகாத்மாவை பின்பற்ற வேண்டும்'

—நேரு

புதுடில்லி, மே 13

லக்னோவுக்கும் கான்பூருக்கும் விஜயம் செய்துவிட்டு பாரதப் பிரதமர் நேரு இன்று காலை புதுடில்லி திரும்பினார்.

லக்னோவிலிருந்து புறப்படு முன்னர் பிரதமர் நேரு அங்குள்ள ஒரு பூங்காவனத்தில் மகாத்மா காந்தி ஜியின் சிலையொன்றைத் திறந்துவைத்தார். அவர் அப்பொழுது பேசுகையில் பாரதத்தின் கொள்கைகளை மற்றநாடுகள் பின்பற்றக் கூடிய அளவுக்கு பாரதத்தின் தரத்தை மகாத்மா காந்தி உயர்த்தினார் என்றும் மகாத்மா காந்திக்கு சிலையெடுத்தால் மட்டும் போதாது அவரின் கொள்கைகளை எமது வாழ்நாளில் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறினார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## சீனா நிராகரித்தது?

கொழும்பு, திங்கள்

சீன-இந்தியத் தகராறு சம்பந்தமாக 6 கொழும்பு நாடுகள் தெரிவித்த யோசனையை சீனா நிராகரித்துவிட்டதாய் புதுடில்லியிலுள்ள ஹிந்து பத்திரிகை நிருபர் தனது பத்திரிகைக்கு அனுப்பிய விசேஷச் செய்தியில் கூறியிருக்கிறார்.

## மத்திய ஆலோசனை கமிட்டி அறிக்கை

கொழும்பு, திங்கள்

சுயபாஷையில் ஏற்கனவே வெளியான விஞ்ஞானபாடப் புத்தகங்கள், சிரேஷ்ட தராதரம் வரை போதிப்பதற்கு போதியளவு இருப்பதாகவும் 1966-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஏச். எஸ். ஸி. தராதரத்திற்கு வேண்டிய சுயபாஷை புத்தகங்கள் கைவசம் இருக்குமென்றும், மத்திய ஆலோசனைக் கமிட்டியினால் கல்வி மந்திரி திரு. பதியுதீன் மாமூத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக தரத்திற்கு தேவையான சுயபாஷை புத்தகங்கள் 1968-ம் ஆண்டு கிடைக்குமென்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சிரேஷ்ட தராதரப்பத்திர வகுப்பில், சுயபாஷை மூலம் விஞ்ஞானம் போதிப்பதற்கு போதியளவு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஏச். எஸ். ஸி. வகுப்பில் சிங்களத்தில் போதிப்பதற்கு ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள். தற்பொழுதுள்ள ஆசிரியர்களைக் கொண்டு கூடிய நேரம் வேலை செய்வதாலோ அல்லது எச். எஸ். ஸி. விஞ்ஞான வகுப்பில் மாணவர்கள் தொகையை கட்டுப்படுத்துவதன் மூலமோ இந்தக்குறையை நிவர்த்தி செய்யலாம் என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

—

## அபிவிருத்தி குறைவுக்கு காரணம்

### கிளிநொச்சி எம். பி. விளக்கம்

கிளிநொச்சி, திங்கள்

'அரசாங்கம் கிராம அபிவிருத்திக்குத் தரும்பணம் அந்த வேலைகளுக்கே பயன்படுத்தப்படாமையினால் தான் எதிர்பார்த்த அளவு அபிவிருத்தி காணப்படவில்லை. இத்தகைய ஊழல்களை அரசாங்கத்திற்கு எடுத்துணர்த்த வேண்டியது கிராமமுன்னேற்றச் சங்கங்களின் கடமையாகும்' என்று கிளிநொச்சி எம். பி. திரு. அ. சிவசுந்தரம் மல்லாவிகிராமமுன்னேற்றச்சங்கத்தில் இலவச பால் நிலையத்தை ஆரம்பித்து வைத்துப்பேசுகையில் கூறினார். திரு. க. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சிவசுந்தரம் தொடர்ந்து பேசியதாவது:-

கிராம முன்னேற்றச் சங்கங்கள் மக்களின் கல்வி, கலாச்சாரம், சமயம், பொருளாதாரம் முதலாய பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் காண சேவை செய்ய வேண்டும். சங்கங்கள் தியாக உணர்வோடு சேவைசெய்தாலேதான் மக்கள் சுபிட்சமாக வாழமுடியும்.

கல்வியறிவும் ஆற்றலும் உள்ளவர்கள் ஒன்று சேர்ந்து இச்சங்கத்தை வலுவுடையதாக்கி குறைகளை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

கிராம அபிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். கந்தசாமி, கிராம முன்னேற்றச் சங்க சமாஜத்தலைவர் திரு. த. நல்லதம்பி ஆகியோரும் பேசினர்.

## ரூ. 150-க்கு மேலான வெளிநாட்டு அன்பளிப்புகள்

### பணம் கொடுத்தே பெறவேண்டும்

கொழும்பு, திங்கள்

வெளிநாட்டு அரசாங்கங்களோ அல்லது அவற்றின் பிரதிநிதிகளோ வழங்கும் அன்பளிப்புகளை வெளிநாட்டு பாதுகாப்பு இலாகாவிற்கு அனுப்பிவைக்கும்படி மந்திரிகள், எம். பிக்கள் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆகியோரை அரசாங்கம் கேட்டுள்ளது.

நாட்டின் பிரதிநிதி என்ற முறையில் எவருக்கும் அன்பளிப்புக் கிடைத்தால் அதை வெளிநாட்டு பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பிவைக்க வேண்டும். தனிப்பட்ட முறையில் எவருக்கும் அன்பளிப்புக் கிடைத்துள்ளதாயின் அதுபற்றி அமைச்சுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். வெளிநாட்டிலிருந்து அன்பளிப்பாகக் கிடைக்கும் பொருள்கள் யாவும் சுங்கஇலாகா பிரதம கலக்டரால் மதிப்பிடப்படும். தனிப்பட்டவர்களுக்கு கிடைக்கும் அன்பளிப்புக்கள் 150ரூபாவிற்கு கூடியபெறுமதியுள்ளதாக இருப்பின் அப்பொருளிற்கு மதிப்பிடப்பட்ட பணத்தை அரசாங்கத்திற்குக் கட்டியே அப் பொருளை பெற்றுக்கொள்ளவேண்டும். அவ்விதம் அன்பளிப்புக்குரியவர் அப் பொருளை வாங்கிக்கொள்ளாவிடில் அந்தப் பொருள் நூதனசாலைக்கு அனுப்பிவைக்கப்படும். இந்த முறை இந்தியாவில் கையாளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## 'சட்டவிரோத செயல் கூடாது'

—மந்திரி

உடுநுவரை, திங்கள்

சர்வாதிகார ஆட்சியையுடைய ரஷ்யாவிலும் வேறு நாட்டிலும் அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள் அல்லது சுட்டுத்தள்ளப்படுவார்கள். ஆனால் இலங்கையில் சட்டங்கள் அந்த விதமான தண்டனைகளுக்கு இடமளிக்கவில்லை. இனிமேலும் சட்டங்களுக்குமாறாக எதுவும் நடைபெறாது என நான் நம்புகிறேன்" என்று உள்நாட்டு வீடமைப்பு மந்திரி திரு. மகாநாமசமரவீரா உடுநுவர கிராமச்சங்க கந்தோரில் நடைபெற்ற கூட்டத்தின் போது கூறினார்.

அவர் தொடர்ந்து பேசிய போது கூறியதாவது: உள்ளூராட்சி உத்தியோகஸ்தர்களின் கோரிக்கைகள் நியாயமாயிருந்தாலும் தற்பொழுதுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக எதுவும் செய்ய முடியாமலிருக்கிறது. முந்திய அரசாங்கத்திலிருந்த மந்திரிகளிலும் பார்க்க, வீட்டுப் பிரச்னை சம்பந்தமாக நான் என்னால் இயன்ற சேவையைச் செய்திருக்கிறேன்.

—

## அமெரிக்கா ராணுவ சப்ளை

வாஷிங்டன் மே 13

லாவோஸில் நடுநிலைமைப் படைகளுக்கு அமெரிக்கா ராணுவ சப்ளைகளை அனுப்பி வைத்திருப்பதாய் இங்கு அறிவிக்கப்பட்டத.

## வில்லூன்றி ஆலய உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் வில்லூன்றி ஸ்ரீ வீரகத்தி விநாயகராலயத்தின் வருடாந்தமகா உற்சவம் இன்று ஆரம்பமாகி நடைபெறவிருக்கிறது. இம்மாதம் 26-ம் திகதிவரை நடைபெறவிருக்கும் இவ்வாலய உற்சவங்களில் உபந்நியாசங்களும், கதாப்பிரசங்கங்களும் நடைபெற ஏற்பாடாகியுள்ளன.

—

## 'தவறான பாதையில் இழுத்துச்செல்கிறார்'

### தேரோ மீது கண்டனம்

அம்பலாங்கொடை, செவ்.

கடந்த பொதுத் தேர்தலின் போது, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால், புத்த சமயத்தை அழித்து விடும் என்று பிரசாரம் செய்த, ஞானசீக தேரோ, இன்று வலிமையற்ற சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு வழி கூறி வருகிறார்" என்று கரந்தேனியா யு. என். பி. வாலிப முன்னணி கூட்டத்தில் பேசிய, அம்பலாங்கொட யு. என். பி. கிளைத்தலைவர் டாக்டர். எச். ரட்டசேன கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ஞானசீக தேரோவிற்கு இந்த நாட்டைப்பற்றி அக்கறை காட்டாமல், மக்களை தவறான பாதைக்கு அழைத்துச் செல்கிறார்.

மெதிவல யூ.என்.பி. வாலிப முன்னணி தலைவர், பேசிய போது, அரசாங்கம் நாட்டின் கல்விப் பிரச்சனையில் அக்கறை காட்டுவதாக கூறிய போதும், பல மகா வித்தியாலயங்கள் ஓலைகளால் வேயப்பட்டிருப்பதோடு, பாடசாலை கட்டிடங்கள் மாட்டுக் கொட்டில்போல் காட்சியளிக்கிறதென்று கூறினார்.

—

யாழ்ப்பாணம், செவ்வாய்

நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் நல்ல மழை பெய்தது. நீண்ட கோடைக்குப் பின், கடந்த 2 தினங்களாக சில மணி நேரம் இங்கு மழை பெய்தது என்பது குறிப்பிடத்தக்கது.

வெற்றிகரமான 2-வது வாரம்!

தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டிய திரைக்காவியம்!

கிங்ஸ்லி (கொழும்பு) ரீகாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) மொடர்ன் (பண்டாரவளை) லக்ஷ்மி (இரத்தினபுரி) விஜிதா (ஹட்டன்) ஜெமினி (ராகலை)

★ மூன்று உள்ளங்களுக்கு இடையே ஒரு போராட்டம்
★ பாசத்திற்கும் காதலுக்கும் ஏற்பட்ட பயங்கர சோதனை!



சிவாஜி கணேசன்
S. S. ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
ஆர். விஜயகுமாரி
எம். ஆர். ராதா
வி. நாகையா
எம். வி. ராஜம்மா
பி. எஸ். வீரப்பா
புஷ்பலதா
நடித்த

பி. எஸ். வி. பிக்சர்ஸ்

ஆலய மணி

டைரக்ஷன் கே. சங்கர்
இசை விஸ்வநாதன் — ராமமூர்த்தி

மனோகரா (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் பத்மினி நடித்த
தூக்கு தூக்கி

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மே மாதம் 15-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.